சங்கநாதம்



சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் - கொழும்பு

திவ்விய ஜீவன சங்கம் - திருக்கோணமலை

திவ்விய ஜீவன சங்கம் ~ சிவானந்த தபோவனம்

திருக்கோணமலை

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்

(தலைமையகம்) - கொழும்பு - 04

இணைந்து வெளியிடும்

சங்கநாதம்

சஞ்சிகைக்கு ஆலோசனை வழங்குவோர்

★ வணக்கத்துக்குரிய சுவாமி பூர்ணாந்தகிரி (இந்தியா)
மடாதிபதி தர்மகர்த்தா - ஸ்ரீ தெய்வானை அம்மன் தேவாஸ்தானம் - கதிர்காமம்

★ திருமதி. செல்வம் கல்யாணசுந்தரம். (B.A. Barrister-at-Law, Attorney-at-Law)
நம்பிக்கை பொறுப்பாளர் - சிவானந்த தபோவனம் - திருக்கோணமலை.

★ திரு. K. விநாயகசோதி
நம்பிக்கை பொறுப்பாளர் - சிவானந்த தபோவனம் - திருக்கோணமலை.

★ திரு. தமிழவேள். இ.க. கந்தசாமி.

★ செல்வி. குமாரலட்சுமி குமாரசிங்கம் B.Sc. (Hons) Lond. School of Economic
காப்பாளர்- சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சி கழகம்
நம்பிக்கை பொறுப்பாளர் - சிவானந்த தபோவனம் - திருக்கோணமலை.

★ திரு. கம்பவாரிதி இ. ஜெயராஜ் (அமைப்பாளர் அகில இலங்கை கம்பன் கழகம்)

ஆசிரியர் குழு

செல்வி. S. லிலாந்தி
(தலைவர் - சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் - கொழும்பு - 04.)

திருமதி. P. குமார்	செல்வி S. பிரதீபா	திரு. T. பிரணவன்
செல்வி. S. சித்திரரூபி	செல்வி. T. பவாணி	செல்வி. G. சுமதி

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சி கழகம் (தலைமையகம்)
Youth League for Sanadhana Dharmic Perception
No. 03, Ridge way Place, Colombo - 04, Sri Lanka.
Tel : 584145

ஒவ்வொரு இந்துவும் அறிந்திருக்க வேண்டிய கதர்காம ஆலய வரலாறு

இலங்கையிலிருக்கும் தொன்மைமிக்க ஆலயங்களில் கதிர்காம புனித சேத்திரமும் ஒன்றாகும். இன்று புனித ஸ்தலம் என்ற கண்ணோட்டத்திலிருந்து விலகி சுற்றுலா செல்லும் களியாட்ட இடமாக மாறிக் கொண்டிருக்கின்றது. அதே வேளை இந்துக்களின் ஒற்றுமையின்மையால் பல ஆலயங்களை இழந்து ஓரிரு கோயில்கள் மட்டுமே இந்துக்களின் கைவசம் உள்ளதென்பது ஒவ்வொரு இந்தும் அறிந்திருக்க வேண்டும்.

இந்துக்கள் தங்களை ஒன்று சேர்த்து இயங்காமையால் பல கோயில்களை இழந்து தென் பிரதேசத்திற்கு செல்வதே ஆபத்தான நிலைமையாக மாறி வருகிறது. கதிர்காம வரலாறு பற்றி ஸ்கந்த புராணம் கூறுகிறது. இந்தியாவின் இருக்கும் கைலாச மலையும் (உத்தர கைலாஸ்) திருக்கோணமலையிலிருக்கும் திருக்கோணேஸ்வரம் (தக்ஷனை கைலாயம்), கதிர்காமம் ஒரே 81° 10' Meridial இல் அமைந்துள்ளது.

கதிர்காம மடத்திற்கு பின்வரும் கோயில்கள் இந்துக்கள் நிர்வாகத்தின் கீழ் இருந்தன.

(1) தெய்வானை அம்மன் கோயில்
(2) கந்தசுவாமி மூலஸ்தானம்
(3) கல்யாண மண்டபம்
(4) சிவன் கோயில்
(5) சுப்பிரமணிய கோயில்
(6) வைரவர் கோவில்
(7) லக்ஷமனப் பெருமாள் கோயில்
(8) அய்யனார் கோயில்
(9) மாணிக்க பிள்ளையார்
(10) கதிரமலை
(11) வள்ளிமலை

ஆகிய இருந்தன.

இன்று இதில் எத்தனை ஆலயங்களை, இந்த மடம் தன் வசம் கொண்டிருக்கின்றது? தொடர்ந்து வாசியுங்கள், நீங்கள் வியக்கும் செய்திகள் பல உள்ளன.

இவ்வாலயத்தினை தச நாமிகள் என அழைக்கப்படும் சந்நியாசிகள் தொன்று தொட்டு நடத்தி வந்தனர். கிடைக்ககூடிய வரலாற்று ஆய்வுகளின் படி முதன் முதலில் கல்யான் கிரி என்பரே தவம் செய்வதற்கு கதிர்காமத்திற்கு வந்தார். முருகப் பெருமானின் மந்திரம் பொறிக்கப்பட்ட யந்திரத்தை தயாரித்து இடைவிடாது 12 வருட காலம் சடாட்சர மந்திரத்தை உச்சரித்தார். அந்த ஞானியால் சக்தி ஏற்றப்பட்ட யந்திரமே இப்பொழுது உற்சவ காலங்களின் போது யானை மீது வைக்கப்பட்டு திரு உலா வருகிறது.

36398

கல்யாண் கிரி என ஒரே பெயர் கொண்டு அழைக்கப்படும் மூவர் இருந்ததாக வரலாறு கூறுகிறது.

முதலாவது கல்யாண்கிரி சுவாமிகளே தெய்வானை அம்மன், கல்யாண் மண்டம் என்பவற்றை ஸ்தாபித்தவர். இவருடைய சமாதியே லிங்கமாக மாறியது. இவருடைய சமாதி அமைந்த ஆலயத்தை முத்துலிங்க சுவாமி கோயில் என அழைப்பர்.

ஒரு ஞானியினுடைய உடல் அவரது சமாதியின் பின் எவ்வாறு லிங்கமாக மாறுகிறது என்பது பற்றி விரிவாக, விஞ்ஞான பூர்வமாக எதிர்வரும் சஞ்சிகைகளில் வெளியிடப்படும்.

தக்ஷிண மான்மியம் எனும் நூல் முதலாவது கல்யாண் கிரியை பற்றி விரிவாக கூறுகிறது.

இரண்டாவது கல்யாண்கிரி கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். மூன்றாவது கல்யாண்கிரி சுவாமிகள் முதலாம் இராஜாசிங்கன் காலத்தின் பிற்பகுதியிலும் இரண்டாம் இராஜசிங்கன் ஆட்சியின் ஆரம்பகாலத்திலும் வாழ்ந்தவர். தற்போதைய ஆலயம் மூன்றாவது கல்யாண்கிரியின் காலத்தில் கட்டப்பட்டதாக கதிரைமலைப் பள்ளின் 103ம் பாடல் தெரிவிக்கின்றது. இந்த மூன்றாவது கல்யாண் கிரி சுவாமிகள் இந்தியாவில் அமர்நாத்தை சேர்ந்தவர். அத்துடன் சிறுங்கேரி மடத்தில் ஶ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் சீடராகவும் இருந்தார். கல்யாண மண்டபத்திற்கு பின்புறம் ஆலயத்தில் மடாதிபதிகளின் சமாதிகள் பல இருக்கின்றன. கதிர்காமத்திலே மிகவும் பிரசித்திபெற்றதும் தெய்வீக சக்தி நிறைந்ததும் இந்த புனித இடமே.

சுவாமி மூன்றாவது கல்யாணகிரியின் பின்னர்சுவாமி பாலகிரி மடாதிபதியானார் சுவாமி பாலகிரியின் காலத்திலே வட இந்திய இளவரசி பாலசுந்தரியின் விஜயமும், இலங்கையின் கடைசி கண்டி மன்னன் ஶ்ரீ விக்ரம இராஜசிங்கன் நாட்டை இழந்து சிறையில் இருந்ததும், இவை இரண்டிற்கும் இடையிலான தொடர்பும், கதிர்காமத்தின் பல ஆலயங்கள் இந்துக்களின் கையிலிருந்து வேறு சக்திகளின் கைகளுக்கு ஆலயம் சென்ற முறைபற்றியும் விரிவாக அடுத்த இதழில் வெளிவரும்.

ஆராய்ச்சிக் குழு
(சனாதன தர்ம குழு)

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம் கிளை (மாத்தளை மாவட்டம்)
No.38. Vihara Road,
Matale
Tel: 066-33014

தமிழர்களே! உங்கள் வரலாறு தெரியுமா?

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ் என்ற பெருமையையும், சிறப்பினையும் உடையது தமிழ் என்ற இனிமையான மொழி. அந்த இனிமையான மொழியை பேசுகின்ற, பாரம்பரிய விழுமியங்களை உடைய இனமாகிய தமிழ் இனம் இன்று இலங்கை என்ற சின்னஞ்சிறு தீவிலே அனுபவித்து வரும் துன்பங்கள் சொல்லொனாதவை. இவற்றிற்கு எல்லாம் என்ன காரணம் என்பதைத் தமிழர்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்வது மிக அவசியம்.

இன்று இலங்கைத் தமிழர்கள் உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். இதற்கு மூல காரணமாய்த் திகழ்வது அவர்களிற்கு உள்ள உரிமைகள் அவர்களிற்கு வழங்கப்படாது சொந்த நாட்டிலேயே அவை மறுக்கப்படும் கொடுமை இதனால் இங்குள்ள தமிழர்கள் மட்டுமன்றி உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றிற்கிடையே இலங்கையில் வாழும் தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகளல்ல அவர்கள், வந்தேறு குடிகள் என்று இலங்கை மக்களிடையே இன்று காணப்படும் பரவலான கருத்து "எரிகின்ற நெருப்பிலே எண்ணெய் வார்த்தது" போல இருக்கின்றது.

இப்படியான ஒரு இக்கட்டான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் இனம், தமது இனத்தின் உண்மையான பின்னணி பற்றி அறிய முடியாத நிலையில் இருக்கின்றார்கள், இதற்குக் காரணம் நமது இனத்தைப் பற்றிய சரியான உண்மையான தகவல்களைத் தரக்கூடிய நூல்களைப் பெற முடியாதிருப்பதாகும். அத்துடன் இருந்தும் இல்லாமல் ஆக்கப்பட்டதும் திட்டமிட்டு அழிக்கப்பட்டதும், கிடைப்பவை திரிவுபடுத்தப்பட்டுள்ளனவாகவும் இருக்கின்றன.

உதாரணமாக தற்போது பாடசாலைகளில் விநியோகிக்கபடுகின்ற வரலாற்று நூல்களில் தமிழர் சம்மந்தப்பட்ட வரலாற்றுச் செய்திகள் திரிவுபடுத்தப்பட்டே எழுதப்பட்டுள்ளன. இதனால் தமிழ் இளஞ் சமுதாயம் தமது இனத்தின் சிறப்புப் பற்றி எதனையும் அறிந்து கொள்ளமுடியாத ஒரு துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படும் ஒரு அவலம் காணப்படுகின்றது. இதனை நாம் சாதாரணமாக எண்ணி இருந்து விட முடியாது. ஆனால் தமிழனாகப் பிறந்தவன் தலைகுனிந்து நிற்க வேண்டிய ஒரு கொடுமை நமது பிறந்த மண்ணிலேயே காணப்படுகின்றது. ஏனடா தமிழனாகப் பிறந்தோம் என்று இன்று பலர் ஆதங்கப்படுவதைக் காணமுடிகின்றது.

இப்படியான ஒரு நிலையில்

1. இலங்கையின் பூர்வீகக் குடிகள் யார்?

2. தமிழர்கள் வந்தேறு குடிகளா? அப்படியாயின் எங்கிருந்து ?

3. தமிழர் இனம் இன்று போல அன்றும் அடக்கி ஒடுக்கப்பட்ட இனமாகத்தான் இருந்ததா?

4. தமிழர்களிற்கு என்று தனி இராஜ்ஜியம் அன்று இருந்ததா?
5. நமக்கு என்று ஒரு பூர்வீகம் இல்லையா?
6. நமக்குப் பின் வரும் சந்ததி இப்படியான ஒரு கொடுமையான சூழ்நிலையில் தான் வளரப்போகின்றதா? வாழப்போகின்றதா?
7. இனவிகிதாசாரத்தில் நமது இனம் குறைவாக இருப்பதற்கு என்ன காரணம்?
8. தமிழர்களினால் உரிமைகள் நழுவ விடப்பட்டதா? அல்லது முன்னர் இருந்த தமிழ்த்தலைவர்கள் அரசியல் ஞானம் இல்லாதவர்களா? தூரநோக்கு அற்றவர்களா?

இது போன்ற பல வினாக்கள் உங்கள் சிந்தனையில் எழுகின்றதல்லவா? இதற்குரிய பதில்களையும், நமது இனத்தின் சரியான வரலாற்றுச் செய்திகளையும் தொடர்ந்து வரும் இதழ்களில் நாம் உங்களிற்கு தர விழைகின்றோம்.

இணை ஆக்கம்
ச. பிரதீபா
ஆ. அமுதினி
சனாதன தர்ம கழகம்

HOW TO WIN FRIENDS

Be sweet in speech
Behave well, be polite, be courteous
Have fair dealings
Share what you have with others
Do not argue unnecessarily
Do not contradict simply to gain victory
Stick to your promise
Serve others when they are sick
Develop a magnetic personality
Through meditation and prayer
Hear patiently what other say
When you get a loan of a book
Put a wrapper, keep it clean'
Do not tell anyone that he is wrong
Be generous, be charitable, be kind.

H.H. Swamy Sivananda
Divine Life Society

பணம்
செலவழிக்க
மூன்று வழிகள்
உண்டு: தானம்,
போகம், நாசம்.
எந்த மனிதன்
தானம்
கொடுக்காமல்
அதை
துய்க்காமலும்
இருக்கிறானோ,
அவனுடைய
பணம் பொருள்
அழிந்து
விடும்

PRANA IN HIDU PHILOSOPHY

Creation is dynamic, being both, self creating and influencing. To analyse creation on purely intellectual lines, can influence human thought to take up mechanistic thinking and living. To the Hindu, the intellect is one aspect of the mind, and the study of the mind, only reveals its epistemological identifications. Hindu philosophy, takes creation as a whole, not merely, man for study, apart from his physical and natural his cosmic and celestial environment. Thus it is a philosophy of the whole, holistic, where the segments fit themselves in dynamic arrangement. We know, that the natural environment that is the planetary and the cellular environment the sun and the stars, their radiation man cannot be studied in vicuna, because, he is influenced by his physical and cosmic environment, in fact, his vital functions, are all dependant on these factors. Even, what he celebrate as thought, cosmically reaches man as thought elements, which depending on each individual, is processed and reproduced as invidual thought.

Prana, in Hinduism, is both, consciousness and intelligence, the absolute, on which, all other movements, both, physical and mental depend upon. Gravitational force, electromangetism, thought emotion and all energy forms have their basis in Prana. It is prana that bonds the atom and the cells, moves the stars and planets moves thought in man and upholds consciousness, at their different levels in rock, tree, bird, fish insect and man, totally called phenomena.

Prana is in the air, which man and all creation breath in. It is this prana that is behind the manifestation of the panchabuthas, the five great elements, wind, water, fire, and earth. It is an intelligence, that permeate's the being investing it with growth and dynamism. The flow of prana, given freshness and happiness. The lack of prana makes all things including man, dull state sick and uneasy. The flow of prana, given freshness and happiness. The Yogic art is to increase and harmonise the flow of prana in the individual. An expansive being, unconsciously releases the blocks in his physical self and brings about a condition of the flux and flow of prana, thereby, becoming a vibrant being, displaying qualities of geniality, alertness interest and depth. A sad individual block the paths of prana in body, the path being the nidus of the astral body and nerve clusters of the physical body. This results in disease and depression.

Living is an art. It is neither living it emphatically on material or sensous lines or running away or shrinking away from life. Life is a gift. The flow of prana keeps things moving in excellent fashion. Thought and emotion in their refinement, exhibit the free flux and flow of prana. Prana flows exuberantly in an around an individual who lives expansively. By regulating prana, destiny is controlled and fashioned.

Miss. K. Kumarasinka,
B.Sc (Econ) London

திவ்விய ஜீவன் சங்கம்
திருக்கோணமலை - சிவானந்த தபோவனத் தோற்றம்

(நாகரத்தினம் பிள்ளை தங்கம்மாள் அறக்கட்டளை)
உப்புவெளி, திருக்கோணமலை.

மஹாமண்டலேஸ்வர் ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி குருமஹராஜ் அவர்கள், ரிஷிகேசம் இமாலயத்தில் 1935ம் ஆண்டு திவ்விய ஜீவன் சங்கத்தை ஸ்தாபித்தார்கள் இச்சங்கம் உலகெங்கனும் ஆயிரத்திற்கு மேற்பட்ட கிளைகள் அமைத்துத் தொண்டாற்றி வருகின்றது. இலங்கையில் திவ்விய ஜீவன் சங்கம் முதன் முதலில் திருக்கோணமலையில் சிவானந்த தபோவனத்தில் அமைக்கப்பட்டது. இதன் ஸ்தாபகர் ஸ்ரீ சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி அவர்களாகும். இவரின் பிள்ளைத் திருநாமம் செல்வநாயகி நாகரத்தினம் பிள்ளை, இவரின் அருமைத் தாயார் உயர்திரு தங்கம்மா நாகரத்தினம் பிள்ளை, தந்தை நாகரத்தினம் பிள்ளை. இவரின் சிறுபிராயத்திலே காலமாகிவிட்டதால் தாயும் தந்தையுமாய்த் தாயாரே குடும்பத்தை பராமரித்து வந்தார். பள்ளிப் படிப்பை முடித்து ஆசிரியத் தொண்டாற்றியிருந்தபோது, இமயஜோதி ஸ்ரீ சுவாமி சிவானந்த குருமகாராஜ் அவர்களின் அழைப்பு வந்தது. அவ்வழைப்பை ஏற்று செல்வநாயகி ரிஷிகேசம் சென்றார். குருபரன் விரஜாஹோமம் செய்து இவருக்குச் சன்னியாச தீட்சை கொடுத்து ஸ்ரீ சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி என்னும் தீட்சா நாமம் பெற்றுத் தாயாகத் திரும்பி தமது சொந்த இடத்தில் சொந்தப் பணத்தில் மேற்படி ஸ்தாபனத்தை நிறுவிப் பேருபகாரம் புரிந்தார்கள்.

இத்தாபனத்தின் ஒரு அம்சமாகக் குருகுலம் அமைந்துள்ளது. ஏறக்குறைய 120 பிள்ளைகள் இக்குருகுலத்தில் தங்கி, கல்வியும் பல்வேறு கலைகளும் பயில்கின்றனர். இக்குருகுலத்தின் ஆண்பிள்ளைகள் திருக்கோணமலை நகரில் கட்டப்படும் ஆண்கள் இல்லத்தில் தங்கிக் கல்வி பயில்கின்றனர். சிலர் தொழில் புரிகின்றனர்.

இத்தாபனத்தின் முக்கிய நோக்கம் குருதேவரின திவ்விய ஜீவனக் கொள்கைகளை பரப்புதலாகும். சேவை, அன்பு, கொடை, தூய்மை, தியானம் என்பற்றை முறைப்படி சாதனை செய்து அனுபூதி அடைதலாகும். இதுவே சனாதன தர்மத்தின் ஆணிவேராகும். மேற்கூறிய திவ்விய ஜீவனக் கொள்கைகள் சாதாரணமாக மக்கள் செய்யும் சமூக சேவையிலும் வேறுபட்டது. சமூகசேவை என்பது ஒரு நாகரீகமாகிவிட்டது. தான் வேறு சேவை செய்யப்படுபவர் வேறு என்ற மனப்பான்மையுடனேயே சமூக சேவை செய்யப்படுகின்றது. இதனால் சேவை செய்பவருக்கு "நான் செய்கிறேன்" என்ற ஆணவ முனைப்பு ஏற்பட

வாய்ப்புண்டு. அதனால் அவரது ஆன்ம ஈடேற்றம் தடைப்படுகின்றது. இதனால் சமூகத்தில் இடர்பாடு ஏற்படுகின்றது. சேவை செய்பவருக்கும், செய்யப்படுபவருக்கும் பரிமளிப்பு ஏற்படுவதில்லை. ஆனால் திவ்விய ஜீவனம் இதற்கு மாறான நிலைமையை ஏற்படுத்துகின்றது.

எங்கும் பரந்து, நிறைந்து தொடர்ந்திருக்கும் பிரமத்தை எல்லா ஜீவனங்களிடத்தும், ஜீவராசிகளிடத்தும் கண்டு தான் அதுவாகி அவையாகி தனது ஆத்மாவுக்குத் தான் தொண்டு செய்யும் பாவனையை ஏற்படுத்துகின்றது. அன்பினால் ஆணவத்தை குறைத்து, ஆத்துமார்த்த உணர்வுடன் சேவை செய்யும் போது, செய்பவரின் உள்ளம் தூய்மை அடைகின்றது செய்யப்படுபவரின் உள்ளமும் தூய்மை அடைந்து அங்கு இன்பம் நிறைய உதவுகின்றது. குருதேவர் சுவாமி சிவானந்தா அவர்கள் கொடை என்பது என்ன என்பதை ஆணித்தரமாக விளக்கியுள்ளார். மனிதனுக்கு ஆத்ம ஞானம் கொடுப்பதே மேலாய கொடை என்று கூறித் தன் வாழ்வில் வாழ்ந்து காட்டியுள்ளார். உணவு, உடை, கல்வி முதலான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டாலும் மனிதனுக்கு ஆனந்தம் கிடைப்பதில்லை. அத்தேவைகள் பூர்த்தியானதும் ஆனந்தம் மறைந்துவிடுகிறது. மனிதன் தன்னைத்தான் அறிந்து அனுபவிப்பதே உண்மையான ஆனந்தம். இதற்கு வழிகாட்டுவதே உண்மையான கொடையாகும். எனவே தான் சனாதன தர்ம இளைஞர் விழிப்புணர்ச்சிக் கழகமும், சிவானந்த தபோவனமும் இணைந்து சங்கநாதம் என்ற சஞ்சிகையைப் பிரசுரிக்கும் தேவை ஏற்பட்டுள்ளது. அதைப்படித்து அனைவரும் பயன்பெறுவார்களாக.

❁❁❁

தொடரும் ...

திருமதி. செல்வம் கல்யாண சுந்தரம்

பஞ்சாமிர்தம் செய்வோம் உண்டு மகிழ்வோம்

தேவையான பொருட்கள்

மாம்பழம்	*- 2*	*பேரிச்சம் பழம*	*- 150 கிராம்*
வாழைப்பழம்	*- 6*	*கற்கண்டு*	*- 100 கிராம்*
பலாப்பழம்	*- 10 சுளைகள்*	*தேன்*	*- 5 மே.கரண்டி.*
விளாம் பழம்	*- 1*	*நெய்*	*- 2 மே.கரண்டி*
மாதுளம்பழம்	*- 1*		

செய்முறை

எல்லாப்பழங்களையும் சுத்தம் செய்து சிறுதுண்டுகளாக வெட்டி ஒரு பாத்திரத்தில் இடவும். அதில் தேன், கற்கண்டு, நெய் ஆகியவற்றை சேர்த்துக் கலவையாக்கவும். அத்துடன் முந்திரி வற்றல், கஜு" அல்லது திராட்சைப்பழம் சேர்க்கலாம்.

செய்து பாருங்கள் – பரிசினை வெல்லுங்கள்

150/= 100/= 75/=

1. ஹிந்து என்ற சொல் எவ்வாறு ஏற்பட்டது?
2. ஹிந்து மதம் என வழங்கும் நமது தர்மத்தின் பெயர் என்ன?
3. ஹிந்து தர்மம் சனாதன தர்மம் என ஏன் வழங்கப்படுகிறது?
4. ஹிந்துவின் வாழ்க்கைக் குறிக்கோள் யாது?
5. ஒவ்வொரு ஹிந்துவும் காலையில் எழுந்ததும் நினைவு கூற வேண்டிய புனித நதிகளின் பெயர்களை கூறுக?
6. பஞ்ச கவ்யம் என்பது யாது? அதன் பயன் என்ன?
7. வேதத்தில் எத்தனை மந்திரங்கள் உள்ளன?
8. வேதத்தை முதல் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த மேல் நாட்டவர் யார் ?
9. பஞ்ச தன்மாத்திரைகள் எனப்படுபவை யாவை?
10. ஏழு மேல் உலகங்கள் எனப்படுபவை யாவை?
11. ஆறு கால பூஜை என்று சொல்லப்படுவதிலுள்ள ஆறு காலங்கள் எவை?
12. வான்மிகி இராமாயணத்தில் மொத்தம் எத்தனை பாகங்கள் உள்ளன ?
13. தச வாயுக்களும் எவை?
14. இராமன் தனது வனவாச காலத்தில் அதிக வருடங்கள் தங்கியிருந்த இடம் எது?
15. கம்ப ராமாயணம் எங்கு அரங்கேற்றப்பட்டது?
16. தமிழில் உத்தர இராமாயணம் யாரால் இயற்றப்பட்டது?
17. மகாபாரதத்தில் 18 என்ற எண் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறது?
18. திருமந்திரம் யாரால் எழுதப்பட்டது?
19. மகா வாக்கியங்கள் யாவை?
20. ஏழு கீழ் உலகங்கள் யாவை?

மேலே உள்ள 20 கேள்விகளுக்கும் பூரணமாக விடை எழுதி பரிசில்களை பெற்றுக் கொள்ளுங்கள், 17.07.2000 இற்கு முன் கிடைக்கவேண்டும் எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
No. 03, Ridge way Place, Colombo - 04.

திருக்குறள் அறத்துப்பால்
அதிகார வைப்பு முறை

கம்பவாரிதி இ. ஜெயராஜ்

உலகை உய்விக்கத் தோன்றியவர் நம் திருவள்ளுவக்கடவுள்.
தமிழ் மொழியின் மிக நீண்ட தொன்மை வரலாற்றில்,
தோன்றிய நூல் வரிசை நீண்டது.
இரண்டாயிரம் ஆண்டு தொன்மை கொண்ட சங்க இலக்கியங்களில்,
நுட்பத்தை நோக்க,
தமிழ் மொழி அவ்விரண்டாயிரமாண்டுக்கால எல்லை கடந்தது. அதன் முன்னரே
பல்லாயிரம் ஆண்டு இலக்கிய பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும் எனும்,
உண்மை புலனாகும்.
தமிழர் தம் அந்நீண்ட நூல் மரபில்,
சங்க இலக்கியங்களுக்கு முன்பிருந்த இலக்கியங்கள் பலவும்,
காலத்தால் அழிந்தன.
அங்ஙனம் மறைந்தவற்றுட் பல,
அறநூல்களாய் இருந்திருத்தல் வேண்டும்.
இன்று அவ்வறநூல் வரிசையில்,
நம் கைக்கு கிடைக்கும் மூத்த நூலாய்,
திருக்குறள் திகழ்கின்றது.
வள்ளுவர் தம் அறநூலில்
ஒழுங்கும் தெளிவும்,
முன்னை அறநூல்களின் அவதானிப்பால் விளைந்தவை எனக்கருதல் கூடுமாம்.
வள்ளுவர் தம் அறநூல்,
தனக்கு முன்னைய நூல்களை உள்வாங்கியது மட்டுமன்றி,
தன் பின் இன்று வரை வெளிவந்த அறநூல்களையும்,
உட்கொண்டு வென்று நிற்பது ஓர் அற்புதம்.
இவ்வற்புதப் பொக்கிஷத்தை
ஆக்கித் தந்த வள்ளுவனார்
இயற்கையின் நுட்பங்கள் உணர்ந்து,
அறத்தினது "மூலம்" கண்டதால்,
காலங்கடந்து தம் நூலை நிலைக்கச் செய்தார்.
இவ்வாறான கருத்துகளை வெளிப்படுத்துவதில்,
வள்ளுவன் காட்டும் வண்ணம்,
எண்ணி எண்ணி வியக்கத்தக்கது.
தன் குறள் நூலை
அறத்துப்பால் பொருட்பால், காமத்துபால் என

மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்த வள்ளுவர்
பின்னர்
அறத்துப்பாலினை பாயிரவியல்,
இல்லறவியல், துறவறவியல், ஊழியியல் என நான்கு
பிரிவுகளாகவும், பொருட்பாலினை
அரசியல், அங்கவியல், ஒழிபியல் என
மூன்று பிரிவுகளாகவும்,
காமத்துப்பாலினை
களவியல், கற்பியல் என
இரண்டு பிரிவுகளாகவும்
வகுத்தார்.
இச்சிறு பிரிவுகளில் அறத்துபாலின்
பாயிரவியல் நான்கு அதிகாரங்களையும்,
இல்லறவியல் இருபது அதிகாரங்களையும்,
துறவியல் பதின்மூன்று அதிகாரங்களையும்,
ஊழியல் ஒரு அதிகாரத்தினையும்
தம்முள் அடக்கின.
இங்கனமே பொருட்பாலின்
அரசியலில் இருபத்தைந்து அதிகாரங்களும்,
அங்கவியல் முப்பத்தியிரண்டு அதிகாரங்களும்
ஒழிபியல் பதின்மூன்று அதிகாரங்களும்,
காமத்துப்பாலின்
களவியல் ஏழு அதிகாரங்களும் கற்பியலில்
பதினெட்டு அதிகாரங்களும்
உள்ளடங்கின.
இங்ஙனம்
அறத்துப்பாலில்
முப்பத்தெட்டு அதிகாரங்களும்,
பொருட்பாலில்
எழுபது அதிகாரங்களும்
காமத்துப்பாலில்
இருபத்தைந்து அதிகாரங்களுமாக
குறள்கொண்ட மொத்த
அதிகாரங்கள்
நூற்று முப்பத்து மூன்றாம்.
இவ்வொவ்வொரு அதிகாரங்களும்
பப்பத்துக் குறள்களை உள்ளடக்க
ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களால் திருக்குறள் அமைந்தது.

அடுத்த இதழில் ...

ஆபிரகாம் லிங்கனின் இலட்சியக் கல்வி

மிகவும் குறுகிய பதவிக்காலத்தில் மிகவும் பிரபலமானவராகவும், எல்லோராலும் மதிக்கப்படுவராகவும், ஐக்கிய அமெரிக்காவின் பதினோராவது ஜனாதிபதியாகவும் விளங்கினார் ஆபிரகாம் லிங்கன். இன, நிறபேதங்களை ஒழித்து தாழ்த்தப்பட்டோருக்கு விடுதலை அளித்த இவர், அமெரிக்காவின் உன்னத ஜனாதிபதியாக விளங்கினார். எதற்கும் தைரியமாக முகம் கொடுப்பதனால் இவரிற்கு பல எதிரிகளும் உருவாகினர். இறுதியாக இவரைப் படுகொலையும் செய்தனர்.

இலக்கிய நயம் மிக்க இவரது வசனங்களில் தென்பட்ட தொனி எல்லோராலும் மெச்சப்பட்டது. இவர், தான் சொன்னதைச் செய்து காட்டினார். தான் உபதேசித்தபடி வாழ்ந்து காட்டினார். தனது மகன் எப்படி உருவாக வேண்டும் என்று அவனின் பாடசாலை அதிபருக்கு ஒரு கடிதம் வரைந்தார். அவரின் சிந்தனைக்குத் தொகுப்பான அக்கடிதத்தின் கருத்துக்கள் மாணவர் எல்லோருக்கும் பயன் தரக்கூடியவை. இதோ அவரின் கடிதம்.

எனது மகன் படித்திருக்க வேண்டும். எல்லா மனிதர்களும் நேர்மையானவர்களுமல்ல, எல்லா மனிதர்களும் உண்மையானவர்களுமல்ல, என்பது எனக்குத் தெரியும். ஆனால், பல வில்லன்களுக்கு மத்தியிலும் ஒரு கதாநாயகன் இருப்பான், பல சுயநல அரசியல் வாதிகளுக்கு மத்தியிலும் ஒரு அர்ப்பணிப்புள்ள தலைவன் இருப்பான் என அவனிற்குக் கற்பியுங்கள். இதற்கு பலகாலம் எடுக்கும் என எனக்குத் தெரியும். என்றாலும், உங்களால் முடியும் என்றால் சொந்தமாக உழைத்த ஒரு ரூபாவானது இலவசமாகப் பெறும் ஐந்து ரூபாயிலும் பல மடங்கு பெறுமதியானது என அவனிற்குக் கற்பியுங்கள்.

வெற்றியைப் போலவே, தோல்வியையும் சந்தோஷமாக ஏற்கும் பக்குவத்தை அவனிற்குப் படிப்பியுங்கள். பொறாமையிலிருந்து அவனை விலக்குங்கள். உங்களிற்கு முடியுமானால் அமைதியான புன்னகையின் இரகசியத்தை அவனிற்கு கற்பியுங்கள். மிரட்டுபவர்களை இலகுவில் அடிபணிய வைக்கலாம் என அவன் விரைவிலேயே உணரட்டும். உங்களால் முடியுமானால் புத்தகங்களின் அற்புதத்தை அவனிற்குக் கற்பியுங்கள். ஆனால் மனித அறிவுக்கு எட்டாத அறிவற்ற மாயையான வானத்திலுள்ள பறவைகளையும், வெயிலில் உலவும் தேனீக்களையும், பசுமையான மலை அடிவாரத்தில் மலர்ந்திருக்கும் பூக்களையும் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கும் அவனிற்கு அமைதியான நேரத்தை ஒதுக்குங்கள்.

ஏமாற்றி வெல்வதைவிட தோற்பதில் பெருமை அதிகம் என்பதை பாடசாலையில் அவனிற்குக் கற்பியுங்கள். எல்லோரும் பிழை என்று சொன்னாலும் அவனது சொந்த எண்ணங்களில் விசுவாசம் வைக்கப் பழக்குங்கள். மென்மையாகவும், வன்மையாகவும் பழகும் விதத்தைப் படிப்பியுங்கள். "ஒரே குட்டையில் ஊறும் மட்டைகளைப்போல" இருப்பவர்களிடம் இருந்தும், வித்தியாசமாக இருக்கும் வலிமையையும் அவனிற்கு வழங்குங்கள்.

யார் எது சொன்னாலும் எல்லோருடைய கதைகளையும் பொறுமையாக கேட்கப் பழக்குங்கள். ஆனால் யாருடைய ஆலோசனை என்றாலும் அதை உண்மை எனும் வடி மூலம் வடித்து அதில் வெளிவரும் சரியான விடயங்களை மட்டுமே ஏற்றுக்கொள்ளவும் பழக்குங்கள். உங்களால் முடியுமானால் சோகத்திலும் சிரிக்கும் இயல்பை அவனிற்கு அளியுங்கள். சிடுமூஞ்சித்தனத்தை விலக்குவதற்கும், அதிகளவு இனிமைக்கு அவதானமாக இருப்பதற்கும் அவனிற்குக் கற்பியுங்கள். அவனது ஆன்மாவிற்கும் இதயத்திற்கும் ஒரு போதும் விலைபேசாது இருக்கவும் அவனிற்குக் கற்பியுங்கள்.

கலகக்காரர்கள் ஊளையிடும் போது அவனது செவிகளை மூடிவைக்கப் பழக்குங்கள். நியாயத்திற்காக போராடவும் கற்பியுங்கள் அவனை பெருந்தன்மையோடு நடத்துங்கள். ஆனால் அதிகமாக அணைக்க வேண்டாம். ஏனெனில் நெருப்பில் சுடும் போது தான் இரும்பு அதிக வலிமை பெறுகிறது. அவன் எப்போதும் தனது வாழ்வில் பயபக்தி உள்ள விசுவாசத்தை வைத்திருக்கப் பழக்குங்கள் அப்படியானால் தான், அவன் எப்போது மனித நேயத்தில் பயபக்தி உள்ள விசுவாசம் வைத்திருப்பான்.

இது ஒரு பெரிய கட்டளைதான் ஆனாலும் உங்களால் முடிந்தவரை செய்யுங்கள். எனது மகன் மிகவும் நல்ல சிறிய குழந்தை.

தொகுப்பு - T. சேந்தன் *B.Sc. Engineering*
சனாதன தர்ம கழகம்

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்
கொழும்பு மாநகர் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம்

பேரன்புள்ள அன்பர்களுக்கு வணக்கம். தலைநகர் தனில் தனித்துவ ஆலயம் ஆஞ்சநேயருக்கு அமைந்திடவும் தரணியில் அனைவரும் அனுமானை வழிபடவும் வழி அமைத்தவர் ஸ்ரீ சந்திர சேகர சுவாமிகள். அவர்கள் தெகிவளையில் உள்ள இவ் ஆஞ்சநேயப் பெருமானின் ஆலயத்திற்கு கோபுரம் ஒன்றை அமைப்பதற்காக பக்த பெருமான்களிடம் இயலுமானளவு நிதி உதவியையும் ஒத்துழைப்பையும் கொடுத்து உதவி புரிந்து எம்பெருமானின் திருவருள் பெற்று சிறப்பான நல்வாழ்வுக்கு பாத்திரமாவீர் என பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறார்.

3/11 ஸ்ரீ போதிருக்காராம வீதி (விகார லேன்)
களுபோவில - தெகிவளை - தொ.பே : 726444

யோகாசனமா?

யோகாசனமா அது என்ன? இன்றைய நவீன யுகத்திற்கு இந்த புராதன முறை தேவையா? உடல் உள மன நோயினை தீர்க்கும் ஆற்றல் உள்ளதா?

யோகாசனம் வெறும் உடல் அசைவுகள் தானா? உடற்பயிற்சியும் யோகசனமும் ஒன்றா? மருத்துவத்துறையில் நோயை எளிதாக அறிவதற்கும் கருவிகள் இருக்கின்றது. கவர்ச்சியான நிறங்களில் வெவ்வேறு வடிவங்களில் மருந்துகள் இருக்கின்றது. அவை எல்லாம் இருக்கும் போது why should we turn and twist our body என்று உங்களுக்கு சந்தேகம் ஏற்படலாம்.

யோகாசனம் செய்தால் சாமியாராக வேண்டுமா? அல்லது உலக இன்பங்களைத் துறக்க வேண்டி வருமா? மேற்கு நாட்டவர் யோகாசனம் மூச்சுப்பயிற்சி (பிராணாயாமம்) தியானம் என்பவற்றைக் கைக்கொள்ளுவதால் நாமும் பழகிப்பார்த்தால் என்ன? இவை போன்ற கேள்விகள் உங்களின் மனதில் உதித்திருந்தால் நன்று. நீடுழி நோயின்றி வாழ வேண்டும் என்பது அனைவரினதும் விருப்பம். எண்ணம் செயலாக மாற பல தடங்கல்கள் உள்ளன. நோய் ஏற்பட்டால் தொடர்ந்தும் நோயாளியாக இருக்க வேண்டியது பெருங்கவலை. விரும்பிய உணவை உண்ண முடியாத அவல நிலை உடற்பயிற்சி செய்தால் உடலை திடகாத்திரமாக்குமா? மனதை வலுவூட்டுமா?

மனதிலே ஏற்படுகின்ற அழுத்தங்கள் அமுக்கங்கள் (stress) இன்று எல்லோரையும் கவ்வி உள்ளது. கவ்வியதை தளர்த்த எத்தனையோ முயற்சிகள் முறைகள் உள்ளன. ஆனால் எவை நல்லது கூடாது எம்முறை வெற்றியடையும் என்பதே பெருங்கேள்வி. அப்படி என்றால் மனதை Relax செய்ய என்ன செய்யலாம் என்றால் ரிஷிகள், முனிவர்கள், ஞானிகள், இருடிகள், அறிஞர்கள், கல்விமான்கள், பெரும் சிந்தனையாளர்கள் எல்லோரும் அங்கீகரித்த வழிமுறை தான் அஷ்டாங்க யோகம் (இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி)

பண்டைய ரிஷிகள், முனிவர்கள் அக ஆராய்ச்சி மூலம் உடல் தொழிற்பாட்டை செம்மையாக அறிந்து அதன் சூக்ஷம விடயங்களை தெளிவாக, ஆழமாக, விரிவாக விளங்கியுள்ளார்கள். மனிதனின் உடல் பஞ்சபூதங்களினால் ஆனது. அத்துடன் அன்னமய கோஷம் உடம்பு (physical body) பிராணமய கோஷம் (Pranic sheath) மனோன்மய கோஷம் (mental sheath) விஞ்ஞானமய கோஷம் (Intellectual sheath) ஆனந்தமய கோஷம் (Spiritual sheath) என 5 கோஷங்கள் ஒன்றன் மேல் ஒன்று பின்னிப் பிணைந்துள்ள நிலையில் 72000 நாடிகள் உடலினுள் இயங்குகின்றன. ஒரு மனிதனின் இயக்கத்துக்கு 96 கருவிகள் காரணமாய் இருக்கின்றன. அவற்றில் ஒருவர் நனவு நிலையிலிருக்கும் போது 35 கருவிகள் இயங்குகின்றன அவையாவன-

புறக்கரணங்கள்

(1) ஞானேந்திரியம் - 5 (மெய், வாய், கண், மூக்கு, செவி) அறியும் கருவிகள்.

(2) கன்மேந்திரியம் - 5
(வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம்)
(கன்மேந்திரியம் ஞானேந்திரியங்களின் அனுபவங்கள்)
கண் என்ற உறுப்பு இருக்கும் எனினும் சிலருக்கு பார்வை இருக்காது, செவி இருக்கும் கேட்டல் இல்லாமல் இருக்கலாம். இவை போலவே ஏனையவற்றின் அனுபவங்கள்)

வாயுக்கள் - 10

(பிராணன், அபாநன், உதாநன், வியாநன், சமாநன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்ற ஒவ்வொரு வாயுவும் சமிபாடு, சுற்றோட்டம், வெளியேற்றம், சுவாசம் என 10 வாயுவும உடம்பினுள் 10 செயன் முறைகளை செய்கின்றன.

அந்தக்கரணங்கள்

(மனம், புத்தி, சித்தம், அங்காரம்)

ஆத்மா

இவ்வாறு ஆழமாக அணுஅணுவாய் ஒவ்வொரு அங்கத்துக்கும், அசைவுகளினை ஏற்படுத்தி வலுவூட்டும் முறை யோகாசனத்தில் மட்டுமே உள்ளது.
மனிதனின் 5 வலயங்களையும் 72000 நாடிகளையும் வலுப்படுத்தும் ஆற்றல் யோகசனத்திற்கு மட்டுமே உண்டு. இந்த 5 வலயங்களில் ஒன்றிற்கோ அல்லது அதற்கு மேற்பட்டதிற்கோ Internal ஆகவோ External அழுத்தங்கள், தாக்கங்கள் ஏற்படும் போது சமநிலை தளரும். இன்றைய வாழ்க்கை முறை கூடுதலாக சமநிலையை தளர்த்துவதுவதாகவே அதிகம் உறுதுணையாக அமைகின்றன. இச்சமநிலை தளர்ந்ததும் மனிதனின் தச வாயுக்களில் பிழையான செயற்பாட்டால் தாக்கப்பட்டு, 5 கோஷங்களும் நோயுற்று அமைதியற்றவனாக, விரக்தியுற்றவனாக, சோம்பலுள்ளவனாக, சபல புத்தி உடையவனாக மாறுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம். இச்சமநிலைகள் அனைத்தும் சீராக இயங்குவதற்கு யோகாசனம், பிராணாயாமம் தியானமுறைகளே சிறந்தது.

மீண்டும் வரும் ....

P. சுதர்ஸன் - கொழும்பு பல்கலைக்கழகம்

எல்லோரிடமும் தயவு கொண்டு நட. அவர்கள் எந்த நிலையில் இருந்தாலென்ன? உனக்குக் கோபமே இருந்தாலும் கூட தயை நிறைந்த சொற்களையே பயன்படுத்து.

தேடி வந்த செல்வம்

தேடி வந்த செல்வம் கல்விச் சொத்தாகும்
தேடி வைத்து பார்க்கும் போது முத்தாகும்
கோடியின்பம் தந்து விடும் வித்தாகும்
நாடியதைப் பெருக்கச் செய்வது நம் சித்தாகும்

சின்ன வயதில் சிரத்தையுடன் தொடங்க வேண்டும்
சொன்ன படி மனதினுள்ளே அடங்க வேண்டும்
என்ன வென்று கற்று அதை விளங்க வேண்டும்
பின்னால் உந்தன் வாழ்வினிலே துலங்க வேண்டும்

சொல்லித் தரும் பாடங்களை கேட்க வேண்டும்
வெள்ளை மனதில் போட்டு அதை தேக்க வேண்டும்
இல்லை யென்று சொல்லாமல் அளிக்க வேண்டும்
எல்லையில்லா மகிழ்ச்சியில் நீ களிக்க வேண்டும்

ஒன்று கூடி வாழ்ந்திடவே இன்பம் கூடும்
இரண்டாகி பிரிந்து விட்டால் துன்பம் ஆகும்
அன்று நடந்த தவறுகளை திருத்த வேண்டும்
என்றும் மனதில் நன்றிதனை இருத்த வேண்டும்

ஆக்கம்
ம. ஜெயவதனி
சிவானந்தா தபோவனம் - உப்புவெளி

எத்தனை வெட்டுகள்

ஒருவரிடம் நிறைய நான்கு முழ வேட்டிகள் இருந்தன ஒரு வேட்டியை நான்கு ஒரடி துண்டுகளாக வெட்ட முடியும் அவனுக்கு நூறு ஒரடித் துண்டுகள் வேண்டும். அப்படியானால் வேட்டிகளில் அவன் எத்தனை வெட்டுகள் வெட்டவேண்டும்?

நமிநந்தி அடிகள்

வையம் காக்கும் செங்கோல் வேந்தர்களான சோழர்களின் பொன்னி வள நாட்டில் ஏமாப்பூர் என்னும் புகழ் மிகுந்த ஊர் ஒன்று உள்ளது. அவ்வூர் விசாலமான வயல்களையும், செழுமையான நீர்த்தடாகங்களும் நிறைந்தது அந்த ஊர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஏமாப்பூரில் திருநீற்று நெறியில் வாழும் அந்தணர் குலத்தில் நமி நந்தி அடிகள் எனும் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சிவபெருமான் மேல் மிகவும் பக்தி உடையவர். வாய்மை, மறைநூல், சீலத்தால் சிவந்த வேள்வித் தீயைப் போன்றவர். இரவும் பகலும் நடுயாமத்திலுங்கூட சிவபெருமானின் திருவடிகளையே எண்ணி ஓயாமல் இன்பம் அடைபவர். அவர் தினந்தோறும் தம்மூரிலிருந்து திருவாரூருக்குச் சென்று இறைவனை வணங்கி வந்தார்.

ஒருநாள் அவர் புற்றிடங்கொண்ட புனிதரைப் பணிந்துவிட்டு அருகிலுள்ள அறநெறி என்னும் கோயிலை அடைந்து இறைவனை வணங்கிப் பெருங்காதலோடு திருத்தொண்டுகள் செய்தார். அங்கே எண்ணிலா விளக்குகள் ஏற்றித் தீபத்தொண்டு செய்ய வேண்டும் என்று அவர் விருப்பங்கொண்டார். அவர் ஒரு வீட்டுக்குள்ளே சென்று "திருவிளக்கு ஏற்ற நெய் வேண்டும்" என்று கேட்டார்.

அந்த வீட்டில் இருந்தவர்கள் சமணர்கள் சைவ நெறிக்கு விரோதிகள். அதனால் நமிநந்தி அடிகளை நோக்கி ஏளனமாக நகைத்து உங்கள் பெருமானுக்கு விளக்கு எதற்கு? இங்கு நெயில்லை நீர் வேண்டுமானால் தண்ணீரை முகந்து எரிக்கவும்" என்று கூறினார்கள்.

அதைக் கேட்ட நாயனார் பெரிதும் மனம் வருந்தி மீண்டும் திருகோயிலுக்கே திரும்பி வந்து, இறைவன் திருமுன் மனமுருகிக் கீழே விழுந்து வணங்கினார்.

அப்பொழுது ஆகாயத்திலே ஒரு வாக்கு எழுந்து, "நமிநந்தியே! உன் மனக்கவலையை ஒழித்து விடுக. இங்கு அருகிலுள்ள குளத்து நீரையே முகந்து கொண்டு வந்து ஊற்றி, இடையறாது திருவிளக்கு ஏற்றுக" என்று கூறியது.

அதைக் கேட்டதும் நமிநந்தி அடிகள் மனமகிழ்ந்து திகைத்தார். பிறகு சிவபெருமானின் திருவருளை வியந்தபடி எழுந்து சென்று அருகிலிருந்த திருக்குளத்தில் இறங்கி இறைவனின் திருநாமத்தை உச்சரித்து குளத்து நீரை முகந்து கொண்டு அகலிலே முறுக்கியிடப்பட்ட திரியின் மேல் அந்நீரை வார்த்து விளக்கேற்றினார். அது சுடர் விட்டு மேல் நோக்கி எரிந்தது. குற்றமே நினைத்து குறைகூறிய சமணர்கள் அதை அறிந்து வெட்கப்படும் படியும் இறைவனின் திருவருளால் நாடெல்லாம் அறிந்து அதிசயித்துப் போற்றும் படியும் தண்ணீரையே நெய்யாக கொண்டு வார்த்து அத்தனை விளக்குகளையும் ஏற்றினார்.

❀❀❀

லோ. அனுஷலா ஜனனி

இந்து மதம்

உலகிலே நிலைபெற்றுள்ள மதங்கள் யாவற்றிலும் மிகவும் பழமையானதும் எல்லா மதங்களுக்கும் ஊற்றுக்கண்ணாகவும் தாய் போல விளங்கும் பெருமைக்குரியது இந்து மதமே. உலகத்தைப் போன்று இந்துமதமும் பழமையானது. ஆக்கியவனும் ஆக்கப்பட்ட காலமும் சொல்ல முடியாதது. எனவே தான் இது சனாதன தர்மம் என்று அழைக்கப்படுகின்றது. சனாதன தர்மம் என்றால் சாகா மதம் எனப் பொருள்படும். சாகாமதம் என்னும் பொழுது தொன்மையானது என்பது மட்டுமல்ல "தன்னை சார்ந்த மக்களை மரணமில்லாப் பெருவாழ்விற்கு அழைத்துச் செல்லத்தக்க ஆற்றல் பெற்றது" என்றும் பொருள்படும். இந்து மதம் 'வைதிக மதம்' என்றும் அழைக்கப்படுவதுண்டு. ஆதிகால தவரிஷிகள் ஆண்டவனின் கட்டளைகளாக, சத்தியவாக்குகளாக சக்தி மிகுந்த அருள் மொழிகளை தமக்கு கிடைத்த அனுபவங்களை உபநிடதங்களாக வெளிபடுத்தியுள்ளனர். இந்த வேத உபநிடதங்களை இந்துமதத்திற்கான அடிப்படை தர்மசாஸ்திரங்களாக கொள்வதால் அதாவது தமது பிரமாணநூல்களாக ஏற்றுக்கொள்வதால் இந்துமதம் "வைதிக மதம்" என்று அழைக்கப்படுகின்றது.

இன்று இந்தியாவில் பெருமளவிற்கும் கீழைத்தேய நாடுகளிலும் மட்டுமன்றி மேலைத்தேய நாடுகளினாலும் பின்பற்றப்பட்டு வரும் இந்துமதம் தனக்கென பல சிறப்பியல்புகளையும், பண்பாட்டு அம்சங்களையும் கொண்டுள்ளது. தன் வழிகள் மூலம்தான் இறுதியான விடுதலை சாத்தியமானது என பிறமதங்களைப் போலக் கூறாது, எல்லா மார்க்கங்களும் இறுதியில் ஒரு முடிவுக்குத்தான் இட்டுச் செல்கின்றன என்ற சமரச கொள்கையுடையது இந்துமதம்.

ஓர் இந்துவின் மனித வாழ்வினை தெய்வீகவாழ்வாக மாற்றுவதே. இந்துமதத்தின் நோக்கமாகும். மதப்பண்பாடு உண்மையில் மனிதனின் விடுதலைக்கான பண்பாடாகும். இதனால் தான் பல்வகை மக்களுக்கு தத்தம் மனோபாவத்திற்கும், இச்சைக்கும், ஆற்றலுக்கும், ஆன்மீக வளர்ச்சியின் நிலைகளுக்கும் வாழ்வின் சூழ்நிலைகளுக்கும், ஏற்றாற்போல் இந்து மதம் ஆன்மீக உணர்வையும், யோக சாதனத்தையும் அளிக்கின்றது. இவ்வுலகில் சாதாரணமாகத் தன் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போதே ஒரு தோட்டிக்கோ அல்லது செருப்புத்தைக்கும் தொழிலாளிக்கோ அருளுணர்வு பெறும் வகையில் அது யோக சாதனத்தை நியமிக்கின்றது.

இந்து மதத்தை ஒட்டிய உபசரிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்துமதம் பெருமளவில் சமரசப்பான்மை உடையது. கருணையுள்ளம் படைத்தது. இக்கொள்கை இந்துமதத்தின் அடிப்படை அம்சமாகும். இந்துமதம் எல்லாமதங்களையும் மதிக்கின்றது. எம்மதத்தையும் தூற்றுவதில்லை. இந்துக்கள்

பிறமதத்தவர்கள் அனைவரிடமும் விருப்பமுடனும், அமைதியுடனும், தேசப்பான்மையுடனும் வாழ்ந்து வருகின்றனர். பிற மதங்களை பின்வற்றுபவர்களிடத்தே காட்டும் சகிப்புத்தன்மையும் ஒத்துணர்வும் பாராட்டுதலுக்குரியவை. உண்மை எங்கிருந்து வந்த போதிலும் எத்தகைய உடை உடுத்தி வந்த போதிலும், அதனை பாராட்டுகிறது, பெருமைப்படுத்துகிறது, ஏற்றுக்கொள்கின்றது.

இந்துமதத்தின் தத்துவஞானம் நடைமுறைக்கான சாயலையுடையது. அது அறிவை பெருக்கும் வகையில் ஆர்வமூட்டும் தூண்டுகோல் என்றோ, வீணான வாதப் பிரதிவாதம் நிறைந்தது, என்பதோ பொருள் அல்ல. இந்து தத்துவம் பெருவாழ்விற்கு அடிக்கோலும் வழிமுறையாகும். இந்துக்கள் ஒவ்வொருவருக்குமே தத்துவஞானம் சிறிதளவேனும் தெரியும். ஒவ்வொருவனும் தன் தொழிலை செய்யும் முன்னர் 'ஓம் முருகா' என்றோ 'நாராயணா' என்றோ 'சிவ சிவா' என்றோ இறைவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே தொழிலை ஆரம்பிக்கின்றான். சாதுக்களும் இந்துமதச் சந்நியாசிகளும் வீடுவீடாகச் சென்று வேதாந்த உண்மைகளைப் பரப்பி வருகின்றனர். பிடியளவு தானிய மணிகளைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக விலைமதிக்கவொண்ணா இந்து தத்துவமணிகளை திக்கெட்டும் வாரி வழங்குகின்றனர்.

இந்து மதம் துறவறத்தைச் சார்ந்ததும் அல்ல, கற்பனை நிறைந்ததும் அல்ல அது பல தெய்வ வாதத்தைக் கொண்டதும் அல்ல, ஒரு தெய்வ வாதத்தை உடையதும் அல்ல. அது பல மதங்களையொட்டிய அனுபவங்களைக் கொண்ட ஒரு கலவை மதமாகும். அது வாழ்வின் லட்சியத்தில் குறைவிலாது நிறைவு பெற்ற ஒன்றாகும். பரந்த அளவில் சகிப்புத் தன்மை, ஆழ்ந்த மனிதத் தன்மை, உன்னத ஆன்மீக நோக்கம் ஆகியவை அதில் வர்ணிக்கப்பட்டுள்ளன. அதற்குச் சிறிதும் மதவெறி கிடையாது. மதவெறிக்கு அப்பாற்பட்டது. அதன் காரணமாகத்தான் உலகித்தின் இதர மாபெரும் மதங்களைப் பின்பற்றியவர்களின் பலத்த தாக்குதல்களினின்று ஒருவாறு தப்பிப்பிழைத்து இன்றும் வளம் பெற்று வாழ்ந்து வருகின்றது. வளைந்து கொடுத்து எளிதிற் சரிப்படுத்திக் கொள்ளும் தன்மையும், சகிப்புத் தன்மையும் கொண்டுள்ள இந்துமதத்தைப் போன்று வேறு எம்மதமும் இவ்வுலகில் இல்லை.

எதிர்வரும் இதழில் இந்து மத நூல்கள் தொடர்பான வரலாறு பற்றி ஆராய்வோம்.

வாணிதாஸ்

அன்பார்ந்த வாசகர்களே இந்து மதம் சம்பந்தமான சந்தேகங்கள் இருப்பின் தலைமையகத்திற்கு எழுதி அனுப்பி தெளிவுப்படுத்திக் கொள்ளுங்கள்

ஓ இந்துக்களே நில்லுங்கள் கேளுங்கள் சிந்தியுங்கள்

என் கடமை மதம் மாற்றுவதே யாரை?

ஊடறுப்பது சங்கிலியன்

நெற்றியிலே விபூதி அதன் நடுவினிலே சந்தனம் அத்துடன் குங்குமம் இவை அணைந்தால் நீங்கள் இந்துக்களோ! நீங்கள் மதம் மேல் அன்பே! நான் அதை அணிவதில்லை அப்படியொன்றால் என்னை இந்துவாக ஏற்கமாட்டீர்களா? ஒவ்வொரு மாதமும் வரும் நிறைகளையும் குறைகளையும் தீர்க்கும் முறைகளையும் கூறுகிறேன் விரும்பினால் ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லாவிடின் வார்த்தைகளினால் திட்டுங்கள். அதுவே எனக்கு மகிழ்ச்சி. எனது வேலை மதம் மாற்றுவதே யாரைத் தெரியுமா. இந்துவாக பிறந்து இந்துவாக வாழாமல் இருப்பவர்களை இந்துக்களாக வாழ வைப்பதே எனது முயற்ச்சி மூட நம்பிக்கைகள் நிறைந்தது இந்து மதமா? இந்துக்களா? கண்ணன் புல்லாங்குழலுடன் இருந்தால் செல்வமெல்லாம் ஊதப்படுமாம் தண்டவம் ஆடும் நடராஜர் இருந்தால் வீடு ஆட்டம் காணுமாம் அதிலும் சில கூட்டம் தமிழில் அர்ச்சனை செய்வேண்டுமாம் உங்களில் எத்தனை மனிதர்களுக்கு இந்து மதத்தின் பெருமை தெரியும், அதனுள் அடங்கியிருக்கும் பொக்கிஷம் தெரியும். சிலர் தெரிந்து வியாபாரம் ஆக்குகிறார்கள், சிலர் தெரியாமல் வியாபாரம் ஆக்குகிறார்கள். மூட நம்பிக்கைகளை கைகொள்ளுபவர்கள் யார் தெரியுமா? படித்த மேதாவிகள்! எல்லமே தெரியும் என்று நினைபவர்கள் கோயிலிக்கு சென்றால் வணங்கும் முறை கூட தெரியாதவர்கள் நம்மவர்கள். குறை கூறவில்லை எங்கள் நிலைமையை எண்ணி கவலைப்படுகிறேன். பராவாயில்லை ஒன்று சேர்வோம் சிறிது சிறிதாக முயற்சிப்போம் வெற்றி கிட்டும் மீண்டும் அடுத்த மாதம் எம் மக்களின் மூட நம்பிக்கையோடு சந்திப்போம்.

வெறும் விரதம் வெறும் விரயம்

விரதங்கள் ஏன் அனுஷ்டிக்கப்பட வேண்டும்?
இந்து மதத்திலுள்ள விரதங்கள் எல்லாவற்றையும் கை கொண்டால் பட்டினியால் மரணம் தான் கிட்டுமா?
விரதம் மேற்கொள்பவர்களுக்கு கோபம் அதிகமாக வருகிறதே?
ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதங்களில் விரதத்தை அனுஷ்டிக்கிறார்களே ஏன்?

இன்றைய காலத்தில் விரதம் என்று கூறி ஒரு நேர ஆகாரத்தை கைவிட்டு விரதத்தை நிறைவேற்றும் போது பல சுவையான உணவுகளை உண்டு விரதங்களை நிறைவேற்றுவதால் விரதம் கைக்கொண்ட பலன் கிட்டுமா? அந்நேரத்தில் அதிகமாக உண்பதால் உடலுக்கு நோய் உண்டாகும். உடலைக் கட்டுப்படுத்த நினைக்கும் அதே அளவு மனதைக் கட்டுபடுத்த முடியாமல் மேற்க்கொள்ளும் விரதம் பூரண பலனைத் தரமாட்டாது.

<u>விரதங்கள் பற்றிய ஆரம்பவிளக்கம்</u>

சைவர்களின் சமயவாழ்கையில் விரதங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. விரதம் என்றால் மனம், பொறி வழிப்போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேஷமாக வழிபடல். சாதாரணமாக ஒருவர் தம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டிய அற ஒழுக்கங்களை முறைப்படி கொண்டொழுகுவதும் விரதமாகும். ஏற்கனவே முடிந்துவிட்ட கிருதயுகம், திரேதாயுகம்,' துவாபரயுகம் எனும் மூன்று யுகங்களில் வாழ்ந்தவர்கள் இறைவனை அடைவதற்கு ஜபங்கள் யாகங்கள் போன்ற வழிபாட்டு முறைகளை மேற்கொண்டார்கள். ஆனால் கலியுகத்திலே நாமபஜனையும் பக்திமார்க்கமான விரதாதி அனுஷ்டானங்களுமே இறைவனை அடையப் போதுமானவையாகும்.

விரதங்களை நாம் அனுஷ்டிக்கும்போது கவனிக்கவேண்டியவை உபவாசம், ஆலயவழிப்பாடு, சிவபூஜை என்பவையாகும். உபவாசம் என்பது அருகிலே வசித்தல் என்ற கருத்தையுடையது. மனம், வாக்கு, காயங்களால் ஆண்டவனை நெருங்கியிருத்தலே உபவாசமாகும். இதற்கு ஆலயவழிபாடும் சிவபூஜையும் துணை செய்யும். விரத நாட்களில் மட்டுமன்றி அதற்கு முதல் நாளிலும் தாமச குணத்தை அதிகப்படுத்தும் வெங்காயம், உள்ளி, முருங்கைக்காய், வெற்றிலை முதலியவற்றை நீக்கிவிட்டால் உடலுணர்ச்சிகள் சமனிலைப்பட்டு தாமசகுணத்தைக் குறைத்து சாத்வீக குணங்களை மேம்படுத்தி மன ஒருமைப்பாட்டினை உருவாக்க உதவும். உபவாசமானது சிந்தனை, சொல், செயல் யாவும் இறைவனை நாடியிருக்க உதவுகிறது.

விரதநாட்களில் வைகறைத் துயிலெழல் அவசியம். துயிலெழும் போது தீயசிந்தனைகளை விலக்கி சிவசிந்தனையுடனும், விரதம் பற்றிய நினைவுகளுடனும் எழுந்து காலைக்கடன்களை முடித்து ஸ்நானம் செய்ய வேண்டும். இவ்வேளைகளில் இளநீர், பழரசம், பால் முதலிய குளிர்ந்த ஆரோக்கியமான பானங்களை அருந்துவதுடன் மனத்தினையும் வாக்கினையும் குளிர்ந்த நிலையில் வைத்திருக்க

வேண்டும். இவ்விதம் உடலில் வெளிப்படும் சக்திக்கு ஏற்ப மனதினில் இறை நினைவைப்புகுத்தி ஆன்ம சக்தியை மேம்படுத்த வேண்டும். ஆன்மசக்தி அதிகரிக்கப்பட்டால் சக்திச் சமனிலை ஏற்பட்டு விபரித விளைவுகளைத் தடுக்கும். இன்னோர் முக்கிய அம்சம் யாதெனில் விரதநாட்களில் காலையும், மாலையும் சில நிமிட நேரங்கள் பிராணாயாமத்தில் ஈடுபட்டு வந்தால் விரதத்தின் பலனை அதிகரிக்கச்செய்வதோடு நமது உடலில் சக்திச்சமனிலை ஏற்படவும் உதவும். எதிர்வரும் இதழ்களில் ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய விரதங்களின் சிறப்பினை நோக்குவோம்.

J. ராஜி
(சனாதன தர்ம உறுப்பினர்)

உண்மைச் சம்பவம்

காலி வீதியில் 100ம் இலக்க பேருந்து பிரயாணித்துக் கொண்ட இருந்தது. குறிப்பிட்ட தரிப்பிடத்தில் பேருந்து நின்றது. குறிப்பிட்ட சில தமிழ் இளைஞர்கள் ஏறிக் கொண்டனர். பெரிய புத்தகப்பைகள் தோள்கள் சகிதம், கொழும்பு என்றால் சொர்க்கம் என்ற எண்ணம் அவர்கள் முகத்தில்.

அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தின் பக்கத்து சீட்டில் ஒரு பெண்ணும் அவருக்கு பக்கத்தில் ஒரு பெரியவரும் இருந்தனர். குறிப்பிட்ட இடத்தில் அப்பெரியவர் இறங்க ஆயத்தமானதும் நின்று கொண்டிருந்த இருந்த இளைஞர்களில் ஒருவருக்கு அப்பெண்ணுக்கு அருகில் அமர சந்தர்ப்பம் வாய்த்தது. மற்றய மூவரும் பெரிதாக தமிழில் கதைத்து கும்மாளம் அடித்தனர். மற்றவர்கள் தங்களைப் பார்க்க வேண்டும் என்பதற்காக பிரயாணிகள் கோபம் கொள்ளுமளவிற்கு கீழ்த்தரமாக நடந்து கொண்டனர். திடீரென கொண்டக்டர் வந்தான்,

எவ்வளவு பேர் ஏறினீங்க? எவ்வளவு காசு கொடுத்தது?

அடே காசு வேணுமென்றால் கேள் தாரன் நாலு பேர் ஏறிப் போட்டு மூனு பேருக்கு டிக்கட் எடுத்திருக்கிறாய்... என்றான் தெரிந்த தமிழில் அதட்டலாக.

பயணிகள் யாவரும் பேருந்து அதிரும் படி பெரிதாகச் சிரித்தனர். நானும் பெரிதாக சிரித்துக்கொண்டேன்.

இதுவ்ரை பேருந்தில் எப்படிப் பிரயாணம் செய்வது என்று தெரியாத அந்த நால்வரும் அடங்கி, ஒடுங்கி அமைதியாக வெட்கத்தோடு பிரயாணம் செய்தனர்.

இதனால் கொழும்பு வாழ் தமிழர்களுக்கு சொல்லிக்கொள்வது என்னவென்றால்

கொழும்பு சொர்க்கமும் அல்ல, எமது பூர்வீக பூமியுமல்ல, எமது சொந்த மண் பற்றிய சோகங்களை மறக்காது, புலம் பற்றி நினைவோடு புனிதமாய் வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

நன்றி மீண்டும் வருவேன் அடுத்த இதழில்
யாழ் தமிழன்புக்கவி
சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்

மரணமும் ஒரு பெரும் செலவு

இது விஞ்ஞான யுகம். ஒவ்வொரு நிமிடமும் பணம் உழைப்பதென்ற சிந்தனை உடையவர்கள் மனிதர்கள் நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள் விலைகளின் ஏற்றத்தினால் பணத்தை விரயமடிக்க முடியாது. கொழும்பில் ஒருவர் இறந்தால் ஒரு லட்சம் அளவில் செலவாகும். இறப்பதே அதிகளவு செலவு என்பதால் அதற்கு பின் அந்தியெட்டி என அதிகமாக பணம் செலவாகும். மொத்தத்தில் இந்து கிரியைகள் சடங்குகளுக்கு பணம் வழங்கியே களைத்து விடுவார்கள்.

சிவபெருமான் உயிர்களைத் துன்பத்தினின்றும் நீக்கி அவைகளுக்கு பேரின்பமாகிய திருவடித்தாமாரையோடு சேர்த்தற்காகச் சிற்றறிவையும் சிறுதொழில் வன்மையையும் சிற்றன்பையுந் தரத்தக்க மூவகையுடல்களைத் தொகுத்தருளினார். இவற்றை நல்வழிச் செலுத்தலாற் பேரறிவும், பேராற்றலும், பேரன்பும் வரும். எமது அறிவு தொழிலிச்சைகளை நல்வழிப்படுத்தலே சைவக்கிரியையின் நோக்கமாம். தீயவழியிற் செல்லும் பொறிகளையும் உள்ளத்தையும் அவ்வழிப் போகாமல் நேரேயடக்குதல் அரிது. அவற்றை நல்வழியிற் போக்க முயல்வதே தீநெறிச்செலவைத் தடுக்கத்தக்க முறையாம். அப்பர் சுவாமிகளது திருவங்கமாலை இதனை உணர்த்துகிறது. "பற்றுக பற்றற்றான் பற்றினை பற்றறைப் பற்றுக பற்றுவிடற்கு" என்றுந் திருக்குறளிலும் இக்கருத்து விளங்குகிறது.

கிரியை செய்யுங்கால் அதிலே மனப்பதிவும் அன்பும் அத்தியாவசியமாகும். இவற்றைப் பெறுவதற்கு அதன் தன்மையும் நோக்கமும் கிரியை செய்வோருக்குப் புலப்படல் வேண்டும்.

இன்றைய காலகட்டத்திலே கிரியைகள் என்றால் என்ன? அவை எதற்காக செய்யப்படுகின்றது? அது ஏன் செய்யப்படுகின்றது? என்பவை பற்றி எல்லாம் வினாக்கள் எழுகின்றன. இக்கிரியைகள் செய்வதால் நன்மைகள் ஏற்படுகின்றனவா? அல்லது தீமைகள் ஏற்படுகின்றனவா? இவ்வாறான வினாக்கள் எழும்போது பலரிடையே தெளிவில்லாத விளக்கமும் முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. பொதுவாக திருமணக் கிரியையில் நடைபெறும் காப்புக்கட்டுதல், தாலி கட்டுதல் அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் இவை எல்லாம் எதற்காக செய்யப்படுகின்றது இவை கட்டாயம் செய்யத்தான் வேண்டுமா? இவை பற்றி எல்லாம் உங்களுக்குத் தெரியுமா? அபரக்கிரியை ஏன் செய்யப்படுகின்றது அக்கிரியையில் ஒவ்வொரு முறையும் எந்தெந்த அடிப்படையில் செய்யப்படல் வேண்டும் என்பவை பற்றி எல்லாம் தெளிவில்லாத விளக்கங்கள் காணப்படுகின்றன. இன்றைய காலகட்டத்தில் ஒருவர் இறந்தால் அவருடைய கிரியைகளை செய்ய பிள்ளைகள் அச்சமயம் இல்லாமல் இருக்கலாம். அவற்றை வேறு யார் செய்யலாம்? பிரேதக் கிரியையோடு அந்தியெட்டி ஏன் செய்கிறார்கள்? ஒரே திதியில் இரண்டு இடத்தில் அந்தியெட்டி

கிரியை செய்கிறார்கள். இவ்வாறு இரண்டு இடங்களில் செய்தல் சரியா? பிழையா? என்றெல்லாம் சரியான விளக்கம் இன்மையால் பலருக்கு கிரியை முறைகளில் ஐயம் ஏற்படுகின்றது. பூதபலி என்பது எட்டாம் நாள் அல்லது மூன்றாம் நாள் செய்யப்படல் வேண்டும் ஆனால் சிலர் அடுத்தநாளே செய்கின்றார்கள், ஒருவர் இறந்து திகதி மாதம் தெரியாவிட்டால் அவை எத்தினங்களில் செய்யப்படல் வேண்டும் என்பவை பற்றி எல்லாம் பலருக்கு புலப்படவில்லை. இவற்றை விளக்குமுகமாக தந்தைக்கும் ஒரு மகனுக்கும் இடையே நடக்கும் உரையாடல் பற்றிய சுவாரசியமான கண்ணோட்டத்தை பார்போம்.

(அடுத்த இதழில் தொடரும்)

G. சுமதி
(சனாதன தர்ம கழக உறுப்பினர்)

சிறுவர் பரிசுப் போட்டி

Twinkle Twinkle Little Star
How I wonder what you are
up above the world so high
Like a diamond in the sky.

அன்புள்ள தம்பி தங்கைகளே
இந்த ஆங்கில பாடலை தமிழில் எழுதி அனுப்புவர்களுக்கு பெறுமதிமிக்க புத்தகப் பரிசு தொகை வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
No. 3. Ridgeway Place,
Colombo - 04.

ஒரு கோயில் அமைய வேண்டிய 196 பிரமாணங்களின் விபரங்கள்

தத்துவங்கள்	- 96	சாஸ்திரங்கள்	- 06
கலைகள்	- 64	குணங்கள்	- 03
மூலாதாரம்	- 06	வியாதி	- 02
துவாரங்கள்	- 09	கடவுள்	- 01
பூதங்கள்	- 05		
வேதங்கள்	- 04	மொத்தம்	- 196

தொகுப்பு
L. பிரசன்னா வருண்

இவர்களைத் தெரியுமா?

150/= 100/= 75/=

1) இவர் ஒரு கிரேக்க தத்துவஞானி கி.மு. 348-322 வரை வாழ்ந்தவர். பிளேற்றோவின் மாணவன். மாமன்னன் அலெக்காண்டரின் ஆசிரியர் யார் இவர்?

2) இலங்கையின் விடுதலை இயக்க முன்னோடி கி.பி. 1864-1933 வரை வாழ்ந்தவர். இவரது இளமைப் பெயர் டொன் டேவிட் யார் இவர்?

3) நவீன பௌதீகத்தின் தந்தை சார்பு கொள்கையை கண்டறிந்தவர் 1921 இல் நோபல் பரிசு பெற்றவர். யார் இவர்?

4) இந்தியாவின் தேசத்தந்தை யார்?

5) விஞ்ஞானத்தின் தந்தை கி.பி. 1564-1642 வரை வாழ்ந்தவர் தொலைக்காட்டியை கண்டறிந்தார். யார் இவர்?

6) இருமுறை நோபல் பரிசு வென்ற பெண் விஞ்ஞானி. இவரது கணவருடன் ஆராய்ச்சி மேற்கொண்டார். போலாந்தில் பிறந்தார் பிரான்சில் கல்வி கற்றார். யார் இவர்?

7) அவுஸ்திரேலியாவை கண்டறிந்தவர் யார்? இவரது தொழிவென்ன?

8) ஐக்கிய அமெரிக்காவின் 35வது ஜனாதிபதி இவர் யார்?

9) அண்டத்தின் மையம் பூமி என்பதை பிழை என்று கூறியவர். போலந்தைச் சேர்ந்தவர் இவர் (Revelutions) ரிவலூஷன்ஸ் எனும் நூலை எழுதினார். யார் இவர்?

10) 2 வது உலகயுத்த வெற்றிக்கு காரணமானவர். மூன்று பெரும் யுத்தங்களில் பங்கு பற்றியவர். சிறந்த எழுத்தாளர். பிரித்தானியாவின் பிரதமராக விளங்கியவர் யார் இவர்?

இக்கேள்விகள் அனைத்துக்கும் சரியாக விடை எழுதுபவர்களுக்கு குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பணத்தொகை வழங்கப்படும். விடைகள் 17.07.2000 முதல் கிடைக்கவேண்டும் எழுதி அனுப்பவேண்டிய முகவரி.

இவர்களைத் தெரியுமா
சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம்
No. 3, Ridgeway Place, Colombo 04.

நீங்கள் எப்படி ?

நீங்களும் உங்கள் நண்பரும் முக்கிய வேலையாக மாலை ஐந்து முப்பது மணியளவில் சந்திப்பதாக கூறியிருந்தீர்கள் என வைத்துக்கொள்வோம். ஆறு மணியாகியும் அவர் வரவில்லை உங்களுக்கு டென்ஷனாகி விட்டது. செய்கிறேன் வேலை என்று அவரின் தொலை பேசி இலக்கத்தை தேடுவீர்கள் உங்கள் டென்ஷனில் அது உங்கள் கண்ணுக்கு தெரியாது. ஆனால் அது முன்னால் இருந்தும் ஒரு மாதிரி கண்டுபிடித்து போன் பண்ணி இடிமுழக்கமாக வார்த்தைகளைக் கொட்டி விடுவீர்கள். எதிர் முனையில் அவர் உங்களை சமாளிக் முடியாமல் குறைந்த பட்சம் ஒரு மன்னிப்புக்கூட கேட்காமல் அழைப்பை துண்டித்து விடுவார். அவரின் சூழ்நிலை எப்படியோ? அப்படியென்றால் போன் பண்ணி இருக்கலாம் என்கிறீகளா? அது கூட முடியாமல் போகிற சந்தர்ப்பம் இருக்கலாம் அல்லவா? அதனால் டென்ஷன் இல்லாமல் மெதுவாக, நிதானமாக கேட்டீர்களேயானால் உங்களிடம் ஒரு பத்து தரமாவது மன்னிப்புக் கேட்பதுடம் தனது சூழ்நிலையையும் சொல்லுவார்.

வீணாக டென்ஷனாகி உங்கள் உடம்பை, மனதைக் கெடுத்துக்கொள்வதுடன், ஏன் வீணாக ஒருவரின் நட்பை அல்லது உறவை துண்டிக்க வேண்டும்?

தேவையற்ற டென்ஷன் வைத்தியருக்காக உங்களை காக்கவைக்கும். அதிலும் விட நண்பனுக்காக காத்திருக்கலாம்.

வசதி எப்படி?

மீண்டும் சந்திப்போம்
அன்புடன்
நவரசன்

அன்பின் வழியது உயர்நிலை

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு"

என்று வள்ளுவ பெருந்தகை கூறியதற்கு இணங்க அன்பின் நிலைமையை நாம் நோக்கின் "அன்பு" என்பது விலை கொடுத்து வாங்கக் கூடிய ஒன்றல்ல. அது ஒருவன் பிறப்பில் இருந்தே உருவாவது. ஒருவரிடத்து ஒருவர் அன்பாக பழகும் போதே அன்பை அறியாதவனும் அறியலாம். இதனை வள்ளுவர் திருக்குறளில் 8ம் அதிகாரத்தில் கூறி உள்ளார்.

அன்பு சகல உயிருக்கும் பொருந்தக் கூடிய பண்பு அன்பில்லாத உடம்பு எலும்பற்ற சிறிய புழுப்பூச்சி வெயிலில் வருந்துவதற்கு ஒப்பானது என வள்ளுவர் கூறுகிறார். 'அன்பு' என்ற மூன்று சொல்லிலேயே உலகம் இயங்குகின்றது. ஒரு நாட்டை ஆளும் மன்னன் தன் குடிகளிடம் எவ்வளவுக்கு அன்பு கொண்டுள்ளானோ, அவ்வளவுக்கு ஆட்சி சிறக்கும். இதிலிருந்து அன்பின் ஆழம் பற்றி அறியலாம்.

திருமூலரின் "அன்பே சிவம்" கூற்றுக்கிணங்க அன்பின் நிலை சிவம் ஆகும். இதிலிருந்து அன்பின் நிலைபேறு உயிர் என உணரலாம். அன்பானது பிறருக்கு பகிரக்கூடிய நட்பை பெற்றுதருவது. இன்று நாட்டில் காணப்படும் கொடூர செயல்களுக்கு அன்பின்மையே அடிப்படைக் காரணமாகும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு-நம்மில்

ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு ..."

என்ற பழமொழிக்கு இணங்க அன்பின் மூலம் ஒற்றுமை. ஒற்றுமை இல்லையேல் அன்பு இல்லை என்பதாகும். ஒற்றுமை இல்லாதவர்கள் இடையே அன்பு இருக்காது. அன்பினை பாடாத கவிஞரும் இல்லை. புலவனும் இல்லை. ஃ "உயிர்கள் இடையே அன்பு வேண்டும்" எனப் பாரதி கூறினார்.

அன்பை வலியுறுத்த புறாவை காத்த சிபியின் கதை ஓர் உதாரணம். இக்கதை மூலம் அன்பின் உயர்வை மதிப்பிடலாம். அன்பானது உயிரை போன்றது என்பதற்கு வள்ளுவரின் கூற்று உதாரணம்.

"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை - வான்பாற்கண்
வற்றல் மரம் தளிர்கற்று"

அதாவது உடம்பில் அன்பில்லாது காணப்பட்டால் பாலைவனத்திலுள்ள வற்றல் மரமாகவே காணப்படும். திருக்குறள் போலவே ஏனைய நூல்களும் அன்பு பற்றி கூறுகின்றன. இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றில் கூறப்பட்டுள்ள அன்பின் நிலை வியக்கத்தக்கது.

இராமாயணத்தில் இராமன் இராவணனை பார்த்து "இன்று போய் நாளை வா" எனக் கூறும் இடத்தில் இராமனிடம் காணப்பட்ட அன்பு வெளிப்படுகிறது. எனவே மேற்கூறிய அம்சங்களின் அடிப்படையில் "அன்பு" என்பது எத்தகையது என்பதை காணக்கூடியதாக உள்ளது.

❁❁❁

ஆக்கம்
குறளமுதம்

பெண்களின் நல்வாழ்க்கைக்கு

பிரபஞ்சம் முழுவதும் சிவசக்தி சொருபம் சிவம் என்னும் சொல் ஆண்பாலைக் குறிக்கிறது. சக்தி எனும் சொல் பெண்பாலைக் குறிக்கிறது. இயற்கை சக்தி மயம், அதனுள் ஊடுருவிப் பாய்ந்திருக்கும் அறிவு சிவமயம் இவ்விரண்டினுடைய சேர்க்கையின்றி பிரபஞ்சமில்லை.

இப்பிரபஞ்சத்தில் மங்கையராய் பிறந்திட நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் என்பது யாவரும் அறிந்த உண்மை. தொன்று தொட்டு இறைவன் பெண்களுக்கென்று ஒப்படைத்துள்ள சிறப்பான கடமை குழந்தைகளைப் பெறுவது அவர்களை வளர்ப்பதும் ஆகும். ஆகவே பெண்களின் உடல்நலம் வலிமையுடையதாவும் ஆரோக்கியமுடையதாகவும் பேணப்பட வேண்டும். இதனால் குடும்பத்தில் அவளை கண்ணும் கருத்துமாக பேணி வந்தனர். இதனை சில மூடர்கள் அடிமைத்துவம் எனும் பெயரைக் கொடுத்து கட்டுப்படுத்தினர்.

பெண் தனது இரத்தத்தை பாலாக்கி கொடுத்து மக்களை வளர்க்கிறாள். ஓர் ஆண்மகன் பெறும் வீரமும் அதிலிருந்தே உருவாகிறது. அதனை அவன் மறந்து விடுகிறான். ஆகவே ஆரோக்கியமுள்ள சுறுசுறுப்புள்ள குழந்தைகளை பெறவும் நல்லதொரு சமூதாயத்தை உருவாக்கவும் அவளுடைய உடல் நலம் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.
இனி அவர்களுடைய பொண்பாலுக்குரிய குறிப்பிட்ட நோய்களைப் பற்றிக் கவனிப்போம். பெண்களுக்கு வரும் முக்கியமான நோய்கள் மூன்று வகைப்படும்.

1. மாத விலக்குப்பற்றியவை
2. பிரசவ காலத்திற்கு உரிய குறிப்பிட்ட நோய்கள்
3. குழந்தை பிறந்த பிறகு ஏற்படும் கோளாறுகள்

இவற்றுள் மாதவிலக்கு நோய்கள் மிகவும் முக்கியமானவை. இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தால் மற்றவகை நோய்கள் வருவதற்கு வாய்ப்பே இல்லை. மாதவிலக்கு ஆரம்பமாவது வளரும் பருவத்தில் மிகவும் முக்கியமானதாகும். பெண்கள் இயற்கை வாழ்க்கையை நடத்தி வந்தால் உடல் நலம், உடல் நலநூல்கள் பற்றிய விதிகளைக் கடைப்பிடித்து வந்தால், நோய்வாய்ப்படும் வாய்ப்புகள் மிகமிகக் குறைவாகவே இருக்கும்.
பெண்களின் உடல் நலத்திற்கு சில குறிப்புகள்

1. பெண்கள் இறுக்கமான நாடாக்களையும், இறுக்கமான உடைகளையும் அணிவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இவை இரத்த ஓட்டம் தாராளமாகப்பாய்வதை தடுக்கின்றன.

2. உடல் நலமில்லாதபோது தேனீர், காப்பி, கொக்கோ முதலியவற்றையும் குளிர்பானங்கள் கிளர்ச்சியூட்டும் பானங்கள் என்பவற்றையும் தவிர்க்க வேண்டும்.

நாள்தோறும் சில உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும். யோகாசனப்பயிற்சி விரும்பத்தக்கது ஆனால் பேறுகாலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

4. முடிந்தால் அவர்கள் அதிகமான அளவில் பச்சைக்காய்கறிகளையும் பாலையும் பழங்களையும் உட்கொள்ள வேண்டும்.

5. அவர்கள் முன்னேரத்தில் படுக்கச்சென்று முன்னேரத்தில் விழித்தெழ வேண்டும்.

6. அவர்கள் ஏகாதசி நாட்களில் உபவாசம் இருக்க வேண்டும் அல்லது வாரம் ஒருநேரம் உணவை உண்ணாமல் இருக்க வேண்டும்.

7. மாதவிலக்கு நாட்களில் போதிய ஓய்வு அவசியம்.

தொடரும் .....

S. விலாந்தி

(சனாதன கழக தலைவர்)

அன்பார்ந்த வாசகர்களே!

சங்க நாதம் ஒரு மாத இதழ். உங்கள் திறமைகளுக்கு களம் அமைப்பதற்கு இந்நூல் உங்களுக்கு உதவி புரியும். உங்கள் ஆக்கங்களை வித்தியாசமான சிந்தனை ஓட்டத்துடன் கொழும்பு தலைமையகத்திற்கு அனுப்பி வையுங்கள்.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி

சங்க நாதம்

No. 3, Ridgeway Place,

Colombo - 04

வாழ்வில் நாம்

"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தின் ஊஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"

வாழ்க்கை என்பது வாழ்வதற்கே துறப்பதற்கல்ல என்பதில் மானிடராகப் பிறந்த நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அது எப்போது என்றால் வாழ்க்கையைத் தூய்மையாகக் கொண்டு வாழும்போதுதான் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் தூய வாழ்க்கைக்கு எதிரானதுதான் பொய்வாழ்க்கை அத்தகைய பொய்வாழ்க்கையால் நிரந்தர நின்மதி, அமைதி, மகிழ்ச்சி என்பன ஒரு போதும் இருக்கப்போவதில்லை. பொய் வாழ்க்கையால் நிரந்தரமாக இருப்பவை அவலங்கள், அந்தரங்கள், குழப்பங்கள், கொந்தளிப்புகள், துன்பங்கள், துயரங்கள் தான். இவற்றின் மத்தியில் வாழ்க்கையை எப்படிச் சுவைத்து வாழமுடியும்? தூய்மையான வாழ்க்கையைத்தான் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை. மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வாழ்க்கை. பிறப்பால் தீங்கு விளைவிக்காத வாழ்க்கை, எல்லோருக்கும் நன்மை பயக்கும் வாழ்க்கை, தாழ்வுச்சிக்கல், பயம், அவநம்பிக்கை, அற்ற வாழ்க்கை ஆகும். நாம் ஒவ்வொருவரும் வாழவேண்டியது தூய வாழ்க்கையே என்பது உளங்கொள்ளத்தக்கது. நமது இலட்சியம் தூய வாழ்வு வாழ்தல், அறவாழ்வு வாழ்தல், தர்மம், நீதி என்பவற்றின் அடிப்படையான மனித விழுமியங்களைப் போற்றி வாழ்தலே தூய மனித வாழ்வு ஆகும்.

இந்த அடிப்படையில் நாம் எம்மையே கேட்கவேண்டிய கேள்வி ஒன்று உள்ளது "நான் உண்மையான மனித வாழ்வினை வாழ்கின்றேனா? என்பதுதான் அந்தக் கேள்வி நாம் பிறரைக் கேள்வி கேட்பதில் வல்லவர்கள். அதை விட்டுவிட்டு நாம் எம்மைக் கேள்வி கேட்க வேண்டும். சரியான விடையைப் பெறவேண்டும். எம்மில் மறைந்து கிடக்கும் குற்றங்குறைகள், இழிவான குணங்கள், என்பவற்றைக் கிண்டிக் கிளறி வெளிக்கொண்டு வருவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். மனிதனுடைய வாழ்வில் உள்ள பெரும் பிரச்சினை அவனின் அகவாழ்விற்கும் புறவாழ்விற்கும் இடையே இணக்கம் காண முடியாமல் இருத்தலாகும். அதனால் பல்வேறு முரண்பாடுகள் உடையவனாக வாழ்ந்து விடுகிறான். தாழ்வுச் சிக்கலும் இவ்வாறான ஒரு முரண்பாடே அதனால் வாழ்க்கையில் பல நல்லவற்றை நழுவ விட்டு விடுகிறான்.

இல்லாதவற்றை அணைத்துக் கொள்கின்றான் அதுவே மனமுரண்பாடுக்களுக்கு தீர்வு காணமுடியாதவரை எந்தவித மனித முன்னேற்றமும் இடம் பெறமாட்டாது. வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குத் தடைபோடும் தாழ்வு மனப்பான்மையை இன்னும் வளர்த்துக் கொண்டே வருகின்றார்கள். அது எத்துனை ஆபத்து என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களாக வாழ்பவர்களிடையே தாழ்வு மனப்பான்மை நன்கு விருத்தியாகிச் செழித்து வளர்வதை காணலாம். சமுதாயத்தில் பெரும்பாலும் பெண்களிடையேதான் தாழ்வு மனப்பான்மை இடம்பெற்று இருத்தலை அவதானிக்க முடிகிறது. தாங்கள் எதைச் சதா நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ அதுவாகிவிடுவது இயல்பாகும். இதற்காக மனித மனத்தின் தாழ்வு மனப்பான்மையை நாம் அகற்ற உதவ வேண்டும்.

தொடரும்....

திருமதி. மதி

சிவானந்த தபோவனம் - உப்புவெளி

குறளமுதம்

இரண்டாயிரமாம் ஆண்டு ஆடித்திங்கள் புதிதாக மலர இருக்கும் சங்கநாதத்தில் வாசகர்களான உங்களுடன் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்

திருக்குறள் என்பது மனித வாழ்க்கையை நிரல்ப்படுத்தி வாழும் வழியைக் காட்டுவிக்கும் அற்புத நூலாக எமக்குக் கிடைத்திருக்கிறது. இதை எம்மில் பலர் அறியாது புரியாது இருப்பது மிகவும் வருத்தப்படக்கூடியது.

இதன் காரணமாக திருக்குறளை சிறுவயதிலிருந்தே பிஞ்சு உள்ளங்களில் பதியவைக்க வேண்டும் என்ற நோக்கில் 1992ம் ஆண்டு தைத் திங்களில் இருந்து திருகோணமலை மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே மாதம் ஒரு அதிகாரம் வீதம் கற்பித்து, பொருள் விளக்கி, திருக்குறளை ஆங்கிலத்திலும் கற்பித்து, போட்டி நடத்தி பரிசளித்து வந்தோம். அதன் பயன் மிகச் சிறப்பாக இருந்தமையும் கண்டு பெருமிதம் அடைந்துள்ளேன். இதன் விபரம் யாவும் மறு இதழிலிருந்து தொடர்ச்சியாக எழுதுவேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வேளையில் ஆனித் திங்கள் 2000ம் ஆண்டு உலகத்தில் தலை சிறந்த அணுசக்தி விஞ்ஞானிகளில் ஒருவரான அப்துல் கலாம் என்ற அபூர்வமான மனிதன் கூறிய ஒரு வாசகத்தை வாசகர்களுடன் கலந்து கொள்ள விரும்புகிறேன். அதாவது "என்னுடைய வாழ்வில் இலட்சியப்பொறிகளை உருவாக்கியது திருக்குறள் தான் நான் சோர்வுறும் போதெல்லாம் உள்ளத்துக்கு உரமூட்டி உற்சாகப்படுத்தி மாபெரும் வெற்றியை ஈட்டித் தந்த சக்தியாக விளங்கியது திருக்குறள் தான் என்றும், திருக்குறள் எந்த மொழிக்கும் மதங்களுக்கும் அப்பாற்பட்டது. உலகத்தின் மறை நூல் திருக்குறள் உலகத் தத்துவ ஞானி திருவள்ளுவர். என்று கூறியதை எம் எல்லோரையும் ஆழமாக சிந்திக்க வைக்கிறது. மறு இதழில் விரிவான ஆய்வுக் கட்டுரைகளுடன், உங்களைச் சந்திக்கிறேன்.

இப்புத்தாயிரம் ஆண்டில் புதிதாக மலர்ந்து வரும் சங்கநாதம் ஆலவிருட்சமாக வளர்ந்து மக்களிற்கு குளிர்ந்த நிழலைக் கொடுத்திட வாழ்த்துகிறேன்.

நன்றியுடன்,
குறளமுதம்.

❁❁❁

மனோவசியக்கலை

சக்தி·தியாகராசா

மனோவசியக்கலை என்னும் அற்புதக்கலையானது முற்காலத்திலிருந்து மகான்களால் கையாளப்பட்டு வந்திருக்கின்றது. கண்களால் பார்ப்பதாலும், வாயினால் ஊதுவதினாலும் கைகளால் தடவுவதினாலும் நோய்களை நீக்க முடியும் வைத்தியரால் கைவிட்ட நோய்களையும் மாற்ற முடியும் என்பதனையும் தற்கால மனோவசியக்கலை நிபுணர்கள் நிருபித்துக்காட்டியுள்ளார்கள்.

முற்காலத்தில் இருந்த இக்கலையில் தேர்ந்தவர்கள் புண்பட்ட இடத்திலே வாயால் ஊதியே சுகப்படுத்தினார்கள் பிணியாளர்களை கைகால் தலையிலிருந்து பாதம்வரை மென்மையாகத்தடவித் தூங்க வைத்தார்கள்.

ஆயிரத்திநானூற்றி அறுபத்திரெண்டாம் வருடத்தில் வாழ்ந்த தத்துவகாரர் ஒருவர் கைகளால் தடவிக் கொடுப்பதினால் நோய் நீங்கும் என அபிப்பிராயப்பட்டார். அதுமட்டுமல்லாமல் ஒருவனுடைய பக்குவ நிலையாலும் திட சித்தத்தாலும் அவனிடத்தே ஓர் வகை காந்த சக்தி பிரகாசிக்கின்றது எனவும் கூறியுள்ளார்.

இக்கலையை பெற்றவரிடமிருந்து வெளிப்படும் காந்த சக்தி நோயுற்றவரின் உதிரத்திலும், பிராணனிலும் கலந்து சுகத்தைக் கொடுக்கின்றது. இத்தகைய பெருமைமிக்க வசியக்கலையை தற்காலத்தில் ஒரு சிலரே கற்று மனித குலத்திற்கு பெரும் நன்மையைச் செய்து வருகின்றனர். இப்பொழுது இக்கலை சம்மந்தமான நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன.

இவ்விதிசய பயன்தரும் கலையை மேல் நாட்டாரும் கற்று சமுதாயத்திற்கு நற்பணியாற்றினர். இதனை மெஸ்மரிஸம் என்றும் ஹிப்னாடிஸம் என்றும் பெயர் சூட்டினர். மெஸ்மரிஸக்கலையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் பிரெடிக் அந்தோணி மெஸ்மா இவர் வீல்பட்டினத்தில் 1733 மே மாதம் 13ம் திகதியில் பிறந்தார். 1766 வைத்தியக்கலாநிதி பட்டம் பெற்றார். ரோமன் பாதிரியாரிடம் இவ் ஜீவ காந்த கலையைக்கற்றுக் கொண்டார். இதன் வியத்தகு இரகசியங்களை வெளிப்படுத்தினார். பலரது நோய்களை தூக்கநிலையில் வைத்து நீக்கினார். நோய்வாய்ப்பட்ட பலர் இவரை நாடிவந்து சுகம் பெற்றனர். இவர் மேல் பொறாமை கொண்ட சிலர் இவரது இந்த வைத்திய முறையைத் தடைசெய்யும் படி அரசியிடம் முறையிட்டனர். விளைவு தடை செய்யப்பட்டது. இதனால் மெஸ்மர் அவர்கள் பாரீஸ் சென்றார். பல மாணவர்களுக்கு தான் கண்டறிந்து பயன்படுத்தும் மெஸ்மரிசத்தைப் போதித்தார். இந்தவைத்தியமுறையானது தலையில் இருந்து பாதம் வரை மெதுவாக மென்மையாக தொட்டு தடவி இறக்குதல், இருகைகளும் நோயாளியுடைய உடம்பின்மேல் 1 அங்குலம் உயரத்தில் வைத்தும் இறக்கலாம். முதலில் உறக்கத்தில் ஆழ்த்தி சுவாச்சியத்தின் மூலமாக நோய்களை அகற்றுவார். தான் கண்டறிந்த இக்கலைக்கு தனது பெயரை வைத்து மெஸ்மரிசம் என அழைக்க வைத்தார். இவர் 1941ல் பிரான்சிலிருந்து இங்கிலாந்திற்கு பறந்தேன் என்று கூறியுள்ளார்.

இவரது மெஸ்மரிசக்கலையைப் பற்றி டாக்டர் பிரேயிட் என்பவர் ஆராய்ந்தார். தான் கண்டறிந்த புதிய முறைக்கு ஹிப்னாடிசம் என்னும் பெயரை வைத்தார். பிரகாசமான கண்ணாடி உருண்டையைப் பார்க்கவைத்தும் நித்திரை வருவித்தலாகும். எனவே மெஸ்மரிசமும், ஹிப்னாடிசமும் மனோவசியக் கலைகளும் செய்கைகள் வெவ்வேறாக இருந்தாலும் காந்த சக்தி அலை அலையாக நோயாளரிடம் போய்ச்சேர்வது ஒன்றாகும்.

ஹிப்நாடிச மந்திரம்

இந்த மனோவசியக்கலையை செய்து முடிப்பவர் 'அமலன்' செய்து கொள்பவர் 'சபலன்' இக்கலையைப் பழகுபவர்கள் நான்கு குண இயல்பில் ஒழுகுபவராக இருத்தல் வேண்டும். அவையாவன 1. நிர்மலமனம் 2. நன்நெறியில் கவனம் 3. கண் இமையாவிழி 4. சொல் நய அருள் மொழி இந்த நான்கிலும் நிறைவு பெற்றால் சிறந்த மனோவசியக் கலை நிபுணராக வரலாம்.

மெஸ்மரிசம், ஹிப்னாடிசம், மானசத்தந்தி, ஞானதிருஷ்டி ஆகியவைகளைப் பயிற்சிகள் மூலம் சித்தியடையலாம்.

மனோதிடப்பயிற்சி

மனோதிடத்தை பலவழிகளால் வளர்த்துக் கொள்ளலாம் புராணவரலாறுகளைப படிப்பது, வாழ்ந்து காட்டிய மகான்கள் வரலாறுகளை அறிந்தும் அதனை செயல் படித்தியும் மனோதிடத்தை ஏற்படுத்தலாம். இதனால் எம்மிடத்தில் அடக்கம், பொறுமை, ஞானம் என்பன எம்மிடத்தில் தோன்றும்.

காலையில் தியானிக்கும் தெய்வீகசக்தியால் பல்பிணிகளை நொடியில் தீர்க்க முடியும். வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோய்களையும் நீக்க முடியும். இயற்கையில் உள்ள ஒவ்வொரு பொருட்களிடமிருந்தும், சந்திர சூரியர், நீர் காற்று ஆகியவற்றிலிருந்து சக்தியைப் பெற்றுக் கொள்கின்றேன். தூர திருஷ்டி பிறமன ஆராய்ச்சி துரியதரிசனம் ஆயுள் விருத்தி என்னும் வளர்ச்சி அடைகின்றது. இன்று எனக்கு எல்லாம் வெற்றியும் மகிழ்ச்சியுமாகக் கிடைக்கும்.

(தொடரும்)

முகத்தில் சுருக்கங்கள் விழுந்து விட்டன. தலைமயிர் நரைத்து வெளுத்து விட்டது. அங்கங்கள் எல்லாம் தளர்ந்து விட்டன. ஆனால் ஆசையோ, இளமையாகித் கொண்டே போகின்றது.

HABITS

Habit is an automatic performance of actions without expending the mental and physical labour ordinarily involved in performing actions that are new to us.

Even simple task like brushing your teeth and combing your hair is a habit. These are natural habits, without any harmful effect, learnt from the cradle.

On the other hand, there are harmfully effective, habits which are formed through watching others or learnt through first experience. Habits of drinking, excessive smoking, over indulgence in coffee, and habitual moods of anger, greed, envy, hatred and passion are formed through ill - considered repetitions of misquoted actions that people, knowingly or unknowingly, have enslaved themselves within.

Child like people fail to visualize the ultimate results of their actions

First drink doesn't necessarily mean a person to be a drunkard nor does it mean he wouldn't become a drunkard. Once tasted never stopped. Guard yourself against the first performance of a wrong act. What you do once you are more likely to do again. It is by repetition that a habit grows stronger and bigger, like a rolling snow ball.

A man of good actions strengthens his will to perform further good actions, and thus increases in virtue with little effort. But a slave of bad habits debauches his will and reason, so that eventually he is not only powerless to create new good habits, but also has weakened his hold on whatever good habits he may have had at the start.

People say, "bad habits are easily formed but hard to dispatch". Did anyone say you cannot undo a bad habit?

Habits patterns of years does not change effortlessly in a minute. You need to apply the full strength of your determination in counteractively until the bad habit is worn out. You could even think of all the ill effects these bad habits cause you in order to strengthen your determination. Spiritual company, change of mental environment [so that you won't be disturbed by others' actions] and other uplifting in fluency can help.

Say-analysis also contributes in order to alter a habit. White analysing yourself dispassionately, don't allow yourself to be overwhelmed with discouragement at the revelation of your shortcomings that honest self-analysis usually brings. Analyse yourself fearlessly, you will be able to stand the critical analysis of others without flinching. Most people don't stop to analyse their actions or emotions. They skim through life thinking they are perfect why bother? Knowing what your shortcomings are you will stop to think before doing an action. It takes time to alter a habit but patience will win in the end. Feel encouraged by the truth "Whatever you have created, or done, you can undo".

It each day doesn't find you a better person than you were the day before, remember you are not only going backward in health but also in mental peace. So try, from today, to overcome inimical habits hidden within you, created according to environmental likes & dislikes. Get rid of them and feel to act from reasons alone.

"Your habits are not you, they hide the true nature of yourself".

சித்திரக்கதைப் போட்டி

* பத்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கானது, பரிசுக்குரியது.
* இந்த படங்களுக்குரிய கதையை உங்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதி அனுப்பவும்.
* முகவரி: "சங்கநாதம்" சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம், No: 03, Ridge Way Place, Colombo 4.

With Best Compliments From

MR & MRS .T .RAVIENDRARAJAH

Hee Hee - 1

பேரன் : தாத்தா இந்தியா போய் சாமி கும்பிட்டு வந்தீர்களே எதை விட்டுட்டு வந்தீங்க?

தாத்தா : பேரா கோபத்தை விட்டுட்டு வந்தேனடா.

பேரன் : கோபத்தை விட்டுட்டீங்களா?

தாத்தா : ஆமா கண்ணா.

பேரன் : உண்மையாகவா?!

தாத்தா : ஆமாடா.

பேரன் : நிஜமாகவா?!

தாத்தா : அட போடா நிஜமா விட்டுட்டேன்.

பேரன் : சத்தியமா?!

தாத்தா : ஏய் எத்தனைத் தரம் சொல்லியாச்சு இனி உதைப்படுவாய் ஜாக்கிரதை.

பேரன் : ஹி ஹி ஹி.

With Best Compliments
From

JAYA LALITHANGHI
Jewellers

No. 225, Galle Road,
Colombo.04
Tel. 595144

Hee Hee - 2

ஒருவர் : அந்தாள் டாக்டரிடம் போய் எதை ஸ்கான் பண்ணிப் பார்த்தார்? எதாவது கட்டியா?

மற்றவர் : அது ஒன்றுமில்லை நேற்று ஒரு சாமியார் ஒவ்வொரு மனிதனிலும் கடவுள் இருக்கிறார் என்று சொன்னதைக் கேட்டு heart ஐ ஸ்கான் பண்ணப் போனார்.

With Best Compliments
From

CARNATION TEXTILES
Dealers in Readymade
Garments and Jeans

No. 128 1/iv
Favourite super market
Keyzer street
Pettah.
Tel. 432100

கணவன் : உன்னைச்சொல்லி குற்றமில்லை என்னைச்சொல்லிக் குற்றமில்லை காலம் செய்த கோலமடி கடவுள் செய்த குற்றமடி.

மனைவி : ஏங்க என்னங்க ஆச்சு கோயிலுக்கு போயிட்டு வந்தும் சலிப்புத் தட்டுதா?

கணவன் : அங்கே ஏன் போனேன் என்று இருக்கு!

மனைவி : ஏன் அப்படி சொல்லுறீங்க?

கணவன் : என்னுடைய அறுநூறு ரூபா செருப்பு களவு போயிட்டுது.

With Best Compliments
From

K.S.T Impex

DEALERS IN MOTOR SPARE PARTS AND GOVERNMENT CONTRACTORES

Peoples Park
PettahTel. 422660

முதலாமவர் : நேற்றுக் குளித்த ஆற்றுத்தண்ணீரில் இன்று குளிக்க முடியாது.

இரண்டாமவர்: ஏங்க முடியாது?

முதலாமவர் : அந்த தண்ணீ தான் ஓடியிருக்குமே.

STUDIO
Chhaya
Photo, Video & Camera Repairs

40-1/1, Galle Road,
Colombo - 06
Tel : 594492,
077-301363

ABIRAMIE JEWELLERS

Solid Gold with latest Designs

அபிராமி ஜுவலர்ஸ்

No, 55/F Manning Place
Wellawatte
TeL : 074-514211

SHREE BEAUTY CARE

40- 1/2 Galle Road
Wellawate, Colombo - 06

Bridal Dressing (Buddhist, Muslim, Christian, Hindu)
Hair Style and Cutting
Beauticians for Ladies and Children

Well Wishers

சங்கநாதம்
விழிப்புணர்வூட்டும் சஞ்சிகை

இச்சஞ்சிகை வெளிவருவதன் நோக்கம்

- ★ இந்துகளின் சரித்திரம் திரிக்கப்பட்டு இந்து தத்துவங்கள் மறைக்கப்பட்டு மூட நம்பிக்கைகள் மலிந்து, இந்துக்கள் திசை மாறி இருப்பதை உணர்ந்து, உண்மை விளக்கம் செய்ய வேண்டி நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதால், இந்துக்களின் அறிவுக்கண் திறட வேண்டுமென்ற வேணவாவின் பேரிலும்,
- ★ அனைத்து இந்துக்களுக்கும் நேசக்கரம் நீட்டும் முகமாகவும்
- ★ இந்துவின் வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி ஆராயவும்
- ★ பழமையும், பெருமையும், மிக்க இந்து மத கருத்துகளை எளிமையான முறையில் அறிந்துகொள்ளவும்
- ★ இந்து சமய தத்துவங்களையும், உளவியல் ரீதியான ஆன்மாத்த கருத்துகளை தெளிவுபடுத்தவும்,
- ★ இந்து சமய பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் அறிந்து கொள்ளவும்,
- ★ வரலாற்று தொன்மைமிக்க ஆலயங்களின் மூடி மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிச்சம் போட்டு காட்டவும்,
- ★ எல்லாவயதிற்குட்பட்ட இந்துவினதும் உள்ளத்தில் இலைமறை காயாக இருக்கும் திறைமைகளை வெளிக்கொணரவும்,
- ★ கோயில் கிரியைகளிலும், தத்துவங்களிலும், காணப்படும் விஞ்ஞான ரீதியான விளக்கங்களை அறிந்திடவும்,

இலங்கையிலும், இந்தியாவிலும் வாழும் இந்து மத பெரியார்களினதும் இலக்கிய அறிஞர்களினதும் ஆன்மீக நிறுவனங்களினதும் வழிகாட்டலிலும் இந்நூல் வெளியிடப்படுகிறது.

சனாதன தர்மம் வளர்க்க,

இந்துவே நீ விழித்தெழு!

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சி கழகம் (தலைமையகம்) - கொழும்பு
திவ்விய ஜீவன சங்கம் - சிவானந்த சபோவனம் - திருக்கோணமலை

சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகத் தலைமையகத்தில் இடம்பெறும் வாரந்த நடவடிக்கைகள்

	கிழமை	நேரம்	
யோகசனம் பிராணாயாமம்	காலை வகுப்புகள் தினந்தோறும்	6.00-7.00	அ. இராமநாதன் (கனடா)
			ந. ஆறுமுகம்
	மாலை வகுப்புகள் செவ்வாய், வியாழன், ஞாயிறு	6.00-7.00	
சைவ சித்தாந்தம் (உண்மை விளக்கவுரை)	சனி	காலை 7.30-8.30	கம்பவாரிதி இ. ஜெயராஜ்
திருக்குறள் விளக்கவுரை	ஞாயிறு	7.30-8.30	கம்பவாரிதி இ. ஜெயராஜ்
கூட்டுப்பிரார்த்தனை (பஜனை)	ஞாயிறு	மாலை. 5.00-6.00	
தியானம் திருமந்திர விளக்கம்	சனி	மாலை 5.30-7.00	

திருமூலர் சங்கம்.

கண்ணதாசனோடு

சில நிமிடங்கள்....

வீட்டைக்கட்டியவன் துணிந்தவன்.
அதற்கு ஒரு பூட்டைக் கண்டுபிடித்தவன் பயந்தவன்.
கடவுள் கூட துணிந்தவனிடம் தான் மனதைக் கேட்கிறான்.
பயந்தவனிடம் தான் கோவில் கேட்கிறான்.
கோடிக் கணக்கில் மக்கள் பிறந்தனர்,
நூற்றுக்கணக்கில் தான் சரித்திரத்தில் காண்கின்றோம்.
தலைமுறைதோறும் வரும் பிறப்பு ஒவ்வொன்றிலும் உன் நினைவு
அழுத்தமாய் பதியவேண்டுமெனில் துணிந்தவனாகு.
துணிச்சல்காரன் கல்லை உண்டாலும் செரிக்கும்,
கண்களில் வீர ஒளி பிறக்கும்,
முகத்தில் மங்காத எழில் நிலவும்,
தொட்டது துலங்கும்,
தொடுத்தது நடக்கும்.
சாவு பிறரைக் கொல்கிறது
துணிந்தவன் சாவைக்கொல்கிறான்,
துணிந்தவன் இயற்கையை ஆள்கிறான்.
– ஆதலால் ஒரே ஒரு கேள்வி –
"நீ ஆள்பவனாக மாற விரும்புகிறாயா?
ஆளப்படுபவனாக (அடிமையாக) இருக்க விரும்புகிறாயா?"
அடிமைக்கு மூச்சு மட்டும் போதும் வீரனுக்குதான் பேச்சும் வேண்டும்.
தகுதியுடையவன் புகழை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது
தகுதியற்றவன் சீரழிவதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

புகழ்

முட்டாள்களின் சமாதி
அறிவாளிகளின் குழந்தை
பணக்காரர்களுக்கு வியாபாரப்பொருள்
அரசியல்வாதிகளுக்கு இரும்புத்திரை
கவிஞர்களுக்கு பரிசு
வீரர்களிற்கு ஞாபகச் சின்னம்

·கவியரசர் – கண்ணதாசன்